Buy and Sell.Pro
வீடு வாங்க Or விற்க...
Selling? Or Buying?
PROPERTY MAX Realty Inc. Brokerage
FREE
Mohan Subramaniyam
Broker / President
Dir: 416-321-2300
REAL ESTATE
MORTGAGE
CLINIC

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686 / 647 857 0086
113A - 3351 Markham Rd
(IN RED BUILDING)

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 31 டிசம்பர் 2021 இதழ்:- 36


# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

**கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!**
**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the
Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance




## 13வது திருத்தம் இந்தியாவின் அழுத்தம் தமிழ்கட்சிகள் ஒன்றிணைவு விமல் வீரவன்ச அலறல்

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்புக்கு காரணம் என்ன?

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000



இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிடும் தினம் முதலாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இந்தக் கடிதத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்பதே காரணம் என்று நம்பகமான வட்டாரங்கள் ஈழநாடுவுக்கு தெரிவித்தன. இதனிடையே முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் ஒன்றை எட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான முயற்சியை தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பின் (5ம் பக்கம் பார்க்க)

RBC Royal Bank
Sugan Sathiaseelan
Mobile Mortgage Specialist
416-271-7584
sugan.sathiaseelan@rbc.com
Your new home doesn't come with mortgage advice. I do.
Advice you can bank on



## சீனா - ஈழத் தமிழர் உறவை எவ்வாறு கையாள்வது?

ஈழத்தமிழரின் அரசியல் பரப்பில் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கியூ சென் ஹொங்கின் வடக்கு விஜயம் அதிக முக்கியத்துவத்தை தந்தமையை கடந்த வாரம் அறிந்தோம். இதைத் தொடர்ந்து(16ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

## இலங்கைப் பிரஜைகள் வெளிநாட்டவரைத் திருமணம் செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம்

இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டவரைத் திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் விசேட பாதுகாப்பு அறிக்கையை பெற வேண்டும் என்று இலங்கைப் பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கைப் பிரஜைகள், வெளி நாட்டவரை திருணம் செய்யும் போது முதலில் வெளிநாட்டவர் தமது நாட்டு பாதுகாப்புப் பிரிவின் சான்றிதழைப் பெற வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5ம் பக்கம் பார்க்க)

Residential insured 5 yrs fixed 1.84%
For All Your Mortgage Needs
Kethesvaran Rasiah
Mortgage Agent
647 504 5566
Mortgage Alliance
Access Inc.

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX Royal Properties
Mortgage Alliance

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience


**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS


HomeLife Today Realty Ltd.,
Brokerage INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Keele/Finch

Toronto $499,900
Bedrooms: 2 Washrooms: 1
York University And New Lrt Line

### Driftwood/Finch

Toronto $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Fully Renovated, Brand New Kitchen

### Markham/Ellesmere
FOR LEASE

Scarborough $1,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Don Mills/Sheppard
FOR LEASE

Scarborough $2,200
Bedrooms: 1+1 Washrooms: 2
615Sqft+176 Sqft, Open Concept

### Hwy 401/ Weston Rd

Toronto $799,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Beautifully Renovated Home

### Salem & Rossland Rd

Ajax $1,059,000
Bedrooms: 4 Washrooms: 3
Potential Sep.Entrance For Basement

### Grandview /Woodstream

Oshawa $1,549,900
Bedrooms: 4 Washrooms: 4
Over 3,322 Sq Ft, Open Concept

### Midland Ave & Danforth

Scarborough Call for Price
Bedrooms: 3+1 Washrooms: 3
Totally Renovated In 2017




YOU'RE INVITED TO
THE fourme VIP
PREVIEW EVENT

GET PRIORITY ACCESS TO THE MOST ANTICIPATED RELEASE OF 2021

BRAND NEW RELEASE
STARTING IN THE 500s
EXTENDED DEPOSIT STRUCTURE • ASSIGNMENT
CAPPED DEVELOPMENT FEES • LEASE DURING OCCUPANCY

1151 MARKHAM RD
FOURME SALES CENTRE
SUNDAY NOV 21ST / 10A-6P

TO RSVP, EMAIL, DM OR CALL ME

### Birchmount /Ellesmere

Scarborough Call for Price
Bedrooms: 2 Washrooms: 2
Renovated With High Quality

### Midland/Eglinton

Scarborough $419,000
Bedrooms: 3 Washrooms: 2
Bright Unit With A Balcony

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)

3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

4 AGP MART
4A WADE AVE
TORONTO

5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

மொன்றியல் தொடர்புகளுக்கு
மார்சே துர்க்கா
(514) 276 9262

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098



04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழு புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# டெல்டா -ஒமைக்ரான் சேர்ந்து கோவிட்19 பேரலையை உருவாக்கி வருகின்றது! உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை! ஐ.நா.பொதுச்செயலாளரும் தெரிவிப்பு!

உலகை உலுக்கி வரும் ஒமைக்ரான் வைரஸ் தென் ஆப்பிரிக்காவில் கடந்த மாதம் 24ம் தேதி முதன் முதலாக கண்டறியப்பட்டது. ஒரு மாத காலத்தில் அந்த வைரஸ் 100க்கு மேற்பட்ட நாடுகளில் பரவி உள்ளது.

ஒமைக்ரான் வைரஸ் ஆபத்து அதிகளவில் தொடர்கிறது என உலக சுகாதார அமைப்பு சொல்கிறது. இந்நிலையில், கொரோனா என்பது மனித இனம் சந்திக்கும் கடைசி பெருந்தொற்று அல்ல. இன்னும் நிறைய பெருந்தொற்றுகள் வரும் என ஐ.நா. பொதுச் செயலாளரும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவு வெளியிட்டார். அதில் அவர் கூறுகையில், கொரோனா என்பது மனித இனம் சந்திக்கும் கடைசி பெருந்தொற்று அல்ல. இன்னும் நிறைய பெருந்தொற்றுகள் வரும். கொரோனாவைக் கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கும் போதே அடுத்த பெருந்தொற்றுக்கு தயாராக வேண்டும். உலக பெருந்தொற்று தயாராதல் தினத்தையொட்டி, இதில் நாம் கவனம் செலுத்துவோம் என பதிவிட்டுள்ளார்.

இதேவேளை டெல்டா மற்றும் ஒமிக்ரான் திரிபுகள் ஒன்று சேர்ந்து, ஆபத்தான வகையில், கோவிட் -19 பேரலையை ஏற்படுத்துகிறது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புதிய பாதிப்புகள் பதிவாகியுள்ள நிலையில், டெட் ரோஸ் அதானோம் கெப்ரேசேயஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக, ஐரோப்பாவின் அதிகபட்ச தினசரி எண்ணிக்கையாக, பிரான்ஸ் நாட்டில் 2 லட்சத்து 8 ஆயிரம் பேருக்கு தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தகவல் படி, கடந்த வாரத்தில் அமரிக்காவில் ஒரு நாளைக்கு சராசரியாக 2 லட்சத்து 65 ஆயிரத்து 427 பேருக்கு தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. டென்மார்க், போர்ச்சுகல், பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும், கோவிட் அதிகப்படியான எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது. போலாந்து நாட்டில் புதன்கிழமையன்று கோவிட் காரணமாக நடந்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 794 ஆக பதிவாகியுள்ளது. இது தொற்று காலத்தின் நான்காம் அலையில் அதிகப்படியான எண்ணிக்கையாகும். இவர்களுள் நான்கில் மூன்று பேர் தடுபபூசி செலுத்தி கொள்ளாதவர்கள்.

டெல்டா திரிப்பை விட சற்றே பாதிப்பு குறைவான ஒமிக்ரான் திரிபு, பல நாடுகளில் விரைவாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இது டெல்டா திரிப்பை விட அதிகம் பரவுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த திரிபு, பாதிப்புகளை அதிகரிக்கின்றன என்று நம்பப்படுகிறது. இது குறித்து பேசிய பிரான்ஸ் நாட்டின் சுகாதார அமைச்சர் ஆலிவர் வேரன், ஒமிக்ரான் பொருத்தவரையில், தான் அதனை அலை என்று கூறப்போவதில்லை அது பெருங்கடலின் அலை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், டெட் ரோஸ் இது இரண்டு திரிபுகளின், இரட்டிப்பான அச்சுறுத்தல் என்று எச்சரித்துள்ளார். இதுதான் ஒட்டுமொத்த பாதிப்புகளின் தாக்கத்திற்கு பின்னால் உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இது சோர்வுற்ற சுகாதார பணியாளர்களையும், சரிவின் விளிம்பில் உள்ள சுகாதார அமைப்புகள் மீதும் பெரும் அழுத்தத்தை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது', என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் 9 லட்சப் பேருக்கு தொற்று பாதிப்பு பதிவாகி வருகின்றன என்று ராய்ட்ட ர்ஸ் செய்தி முகிமை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் மக்கள் தொகையையும், அதன் தடுப்பூசி விகித்தையையும் கருத்தில் கொள்ளும் போது, அந்நாட்டில் ஜனவரி மாத இறுதியில் அதன் ஒமிக்ரான் தொற்று பாதிப்புகள் உச்சத்தை எட்டக்கூடும் என்று சிஎன்என் செய்தி நிறுவனத்திடம் அமெரிக்காவின் சிறந்த தொற்றுநோய் நிபுணரான டாக்டர் அந்தோனி ஃபௌசி கூறியுள்ளார். உலகில் பல பணக்கார நாடுகள், கோவிட் தடுப்பூ சிகளின் மூன்றாவது டோஸை, பூ ஸ்டர் டோஸ்களாக அறிமுகப்படுத்தியுள்ளன. பிரிட்டனில், 12 வயதிற்கு மேல் உள்ள 57 சதவீத மக்கள் மூன்றாவது டோஸை தற்போது பெற்றுள்ளனர்.

ஆனால் டெட்ரோஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில் பணக்கார நாடுகளின் பெரிய அளவிலான பூஸ்டர் டோஸ்கள் தொற்று நோயை நீடிக்க செய்ய வாய்ப்புள்ளது' என்று கூறியுள்ளார். 'ஏனெனில் அவை ஏழை மற்றும் குறைவாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் உள்ள நாடுகளிலிருந்து விநியோகங் களைத் திசை திரும்புகின்றன. இது 'வைரஸ் பரவுவதற்கும், பிறழ்வதற்கும் அதிக வாய்ப்பை அளிக்கும்என்று கூறியுள்ளார்.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 'உலகில் உள்ள 70வீதம் பேர் தடுப்பூசி செல்லுத்திக் கொள்ளும் விழிப்புணர்வை அனைவரும் புத்தாண்டு தீர்மானமாக எடுக்க கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஏறக்குறைய 100 நாடுகள் தங்கள் மக்கள் தொகையில் 40வீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தும் இலக்கை இன்னும் அடையவில்லை என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

உலக சுகாதார அமைப்பு செவ்வாய் கிழமையன்று வெளியிட்ட அறிக்கையின்படி, டிசம்பர் 26ஆம் தேதிக்கு முந்தைய வாரத்தில் ஐரோப்பாவில் அனைத்து திரிபுகளின், புதிய கோவிட் நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை 57 சத வீதமாக அதிகரித்து உள்ளது. மேலும் அமெரிக்காவில் 30வீதம் அதிகரித்துள்ளது. புதன்கிழமையன்று மேலும் பதிவான அதிக எண்ணிக்கைகளுடன், இந்த எண்ணிக்கைகள் ஏறுமுகமாகவே இருக்கிறது.

பிரான்சில் 2 லட்சத்து 8 ஆயிரம் பேருக்கு தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது் இதில் மேலும் 53 பேர் தீவிர சிகிச்சையில் உள்ளனர் 184 உயிரிழிப்புகளும் ஏற்பட்டுள்ளன. பிரிட்டனில் ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 37 பேருக்கு தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. 57 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. கிறிஸ்துமஸ் பண்டிகை காரணமாக புள்ளிவிவரங்கள் அதிகமாக இருக்கலாமென குறிப்பிட்டுள்ளனர்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# 13வது திருத்தம், இந்தியாவின் அழுத்தம், தமிழ்கட்சிகள் ஒன்றிணைவு குறித்து விமல் வீரவன்ச அலறல்



நீண்ட நாட்களுக்கு பின்னர் நாட்டின் மீண்டும் 13 ஆம் திருத்தம் குறித்தும் இந்தியாவின் அழுத்தம் குறித்தும் கருத்துக்கள் முன் வைக்கப்படுவதுடன் இது குறித்து சிறுபான்மை கட்சிகளின் சில முயற்சிகளும் வெளிப்படுகின்றன.

கிழக்கு முனையத்தை விற்பதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்பித்தால், அதற்கெதிராக தீர்மானம் எடுக்கப்படும் ஆனால் இந்த செயற்பாடுகள் அனைத்தும் மீண்டும் வலுப் பெற சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலே காரணமாகும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாடு சகல விதத்திலும் பலவீன மடைந்து சென்று கொண்டுள்ள நிலையில் அதனை சாதகமாக பயன்படுத்த சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன எனவும் அவர் கூறியுள்ளார். அதிகார பரவலாக்கல் மற்றும் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விதமாக தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து சில முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முன் வைக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்

நாடு இன்று பாரிய நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ ஒரு சில இறுக்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தை நாடவோ அல்லது வெவ்வேறு நாடுகளின் உதவிகளை பெற்றுக் கொள்ளவோ வேண்டியுள்ளது.

இந்த முயற்சிகளின் போதும் நாட்டின் பலவீனத்தை கருத்தில் கொண்டு தத்தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தவும் சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றனர். குறிப்பாக 13 ஆம் திருத்தம் என்ற கதைகள் மீண்டும் பொது விவாதத்திற்கு வருகின்றது. மனோ கணேசன், ஹகீம் போன்றவர்கள் இன்று ஒன்றிணைந்து 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வேலைத்திட்டங்களின் பின்னணியில் சர்வதேச நிகழ்ச்சி நிரலே இருக்க முடியும்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு வெவ்வேறு நாடுகளும் தமது அரசியல் பொதியை முன் வைக்க நினைக்கின்றனர்.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைக்காக ஐரோப்பிய ஒன்றியம் சில நிபந்தனைகளை முன்வைப்பார்கள், மனித உரிமைகள் பேரவை சில நிபந்தனைகளை முன் வைப்பார்கள், இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளும் தமது நிதியை பெற்றுக்கொள்ள சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பார்கள். இது பலவீனமான நிலையில் இருக்கும் ஒரு நாட்டின் மீதான அழுத்தங்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

இந்த அரசாங்கம் இதனை செய்ய தயக்கம் காட்டினால் நாட்டை மேலும் பலவீனப்படுத்தி ஆட்சி மாற்றம் வரையில் சென்று புதிய அரசாங்கமொன்றை உருவாக்கும் சதிகளை முன்னெடுப்பார்கள்.


நாம் நிராகரித்த சகலதையும் அவர்களுக்கு விசுவாசமான அரசாங்கத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பார்கள். ஆகவே அரசாங்கமாக நாம் மிகவும் அவதானமாக தீர்மனம் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்றார்.

# இலங்கையை மீட்டெடுக்க இராணுவ ஆட்சி வேண்டுமென ஞானசார தேரர் வலியுறுத்து

நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமென்றால் அடுத்த சில ஆண்டுகளுக்கு நாட்டை இராணுவத் திடம் ஒப் படைக்க வேண்டும் என்பதே எனதுதனிப்பட்ட நிலைப்பாடாகும். அது மட்டுமல்ல இராணுவ ஆட்சி எனக் கூவிக்கொண்டு ஜனநாயகக் கதைகளைக் கூறி வருவோரை சிறையில் அடைக்க வேண்டும்.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும், ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

31 டிசம்பர் 2021:- வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

31 டிசம்பர் 2021:- வெள்ளிக்கிழமை
இரவு 12.00 மணிக்கு விசேட பூஜை
ஆங்கிலப் புத்தாண்டு 2022 விசேட பூஜை

01 ஜனவரி 2022:- சனிக்கிழமை
பகல் 12.00 மணிக்கு விசேட பூஜை
ஆங்கிலப் புத்தாண்டு 2022 விசேட பூஜை
அம்பாள், விநாயகர், முருகன் உலா வருதல்
உபயம்:- அ.ஹீதரன் குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

அன்னதானம்:- உபயம் அ.ரகுராம் குடும்பம்
ஆங்கிலப் புத்தாண்டு அன்று ஆலயம்
காலை முதல் இரவு வரை திறந்திருக்கும்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
பகல் 10.00 மணிக்கு தைப்பொங்கல்
விசேட பூஜை நடைபெறும்.
உபயம்:- பொன்.சிவா சந்தானலட்சுமி. குடும்பம்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
இரவு ஐயப்பன் மகரஜோதி தரிசனம்

விசேட ஐயப்பன் மண்டல பூஜை தினமும் நடைபெறுகின்றது.
ஐயப்பன் படிக்கட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள்
ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# இலங்கைப் பிரஜைகள் வெளிநாட்டவரைத் திருமணம் செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம்

இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டவரைத் திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் விசேட பாதுகாப்பு அறிக்கையை பெற வேண்டும் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டவரை திருணம் செய்யும் போது முதலில் வெளிநாட்டவர் தமது நாட்டு பாதுகாப்புப் பிரிவின் சான்றிதழைப் பெற வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர் திருமணம் செய்யும் வெளிநாட்டவர், இறுதி 06 மாதங்களுக்குள் எவ்வித குற்றவியல் குற்றச்சாட்டையும் எதிர்நோக்கவில்லை என்பது அந்தச் சான்றிதழில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரஜை அல்லது அவர் சார்பான ஒருவரால் மாத்திரம், அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பின்னர் அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவுகள் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படும். பாதுகாப்பு அமைச்சு வழங்கும் அறிக்கைக்கு அமைய பதிவாளர் நாயகத்தினால் திருமணத்திற்கான அனுமதி, மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதனையடுத்து திருமணப் பதிவுக்கான அனுமதி கிடைப்பதுடன் இந்தச் சட்டத்திற்கு அமைய மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்திற்கு சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். அவை யாவன செல்லுபடியாகும் கடச்சீட்டு, அதன் பிரதி மற்றும் செல்லுபடியாகும் வீசா வெளி நாட்டவரின் சிவில் நிலைமையை உறுதிப்படுத்தும் அந்நாட்டு சான்றிதழ், பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம், வெளிநாட்டவரால் தயாரிக்கப்பட்ட தமது சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் பிரதி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சால் இந்தப் புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் டபிள்யூ எம்.எம். பி. வீரசேகர தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் நிதித்தூய்தாக்கலுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள், இலங்கையர்களைத் திருமணம் செய்வதைத் தடுப்பதற்காக புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ள தாக பதிவாளர் நாயகம் மேலும் கூறினார்.

# யாழ்.பல்கலை முன்னாள் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுக்கு எதிராக கொழும்பில் வழக்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதலின் போது கைது செய்யப்பட்ட முன்னாள் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளான மாணவர்கள் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப் பொருள்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்திலும் விடுதிகளிலும் பெருமெடுப்பில் சோதனைகளை முன்னெடுத்தனர். நூற்றுக்கணக்கான படையினர் இந்த தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்த தேடுதலின் போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாதைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன் செயலா ளர் எஸ்.பபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன் போது பயங்




கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ அதிகாரியால் எழுத்து மூல ஆவணம் ஒன்று பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் முன்னிரவு யாழ்ப்பாணம் நீதிவானின் இல்லத்தில் மாணவர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. அதனால் மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்டமா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் 2019 மே 3ஆம் திகதி நடத்திய தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச் சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் ஒட்டப்பட்டிருந்தமையை அடுத்து சிற்றுண்டிச் சாலை நடத்துனர் கைது செய்யப்பட்டார். அவர் 12 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் மீதான வழக்கு பொலிஸாரினால் மீளப்பெறப்பட்டது.

# பௌத்த மயமாக்கலை தடுத்தல்

குருந்தூர் மலையில் பௌத்த அடையாளங்களை நிரந்தரமாக நிறுவும் பணிகள் இடம்பெறுகின்றன. முல்லைத்தீவு குமிழமுனை குருந்தூர்மலை சைவர்களின் வழிபாட்டுக்குரிய இடமாகவே இதுவரையில் இருந்தது. இந்த நிலையில் குறித்த பகுதியை பௌத்தர்களுக்குரிய இடமென்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் தடையுத்தரவை பிறப்பித்திருந்தது. இது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருகின்ற நிலையில் தான் தற்போது அப்பகுதியில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒருபுறம் இந்த விடயம் அரங்கேறிக் கொண்டிருக்கின்ற நிலையில் ஒரே நாடு ஒரே சட்டம் – ஜனாதிபதி செயலணியின் தலைவர், ஞானசாரதேரர், இது ஒரு சிங்கள– பௌத்த நாடு என்பதை ஏற்றுக் கொண்டால் தான் தமிழர்களால் ஆட்சி செய்ய முடியுமென்று தெரிவித்திருக்கின்றார்.

அதேவேளை சில ஆண்டுகளுக்கு நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார். இவ்வாறான ஒருவர் தான் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்கு தலைமை தாங்குகின்றார்! இவ்வாறான ஒருவரின் மூலம் கிடைக்கப்போகும் பரிந்துரைகள் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்குமா?

தமிழ் கட்சிகளும் அந்தக் கட்சிகளிலுள்ள நபர்களும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கும் போது மறுபுறம், தமிழர் தாயகப் பகுதியின் அடையாளங்கள் வேகமாக உருமாற்றப்பட்டு வருகின்றன. ஏற்கனவே கிழக்கின் அடையாளங்களை கணிசமாக மாற்றியமைப்பதில் வெற்றி பெற்றிருக்கும் சிங்கள – பௌத்த ஆட்சியாளர்கள், இப்போது வடக்கை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியிருக்கின்றனர். வெளியாரின் தலையீடுகளால் ஏதாவது – அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டிய, இக்கட்டான நிலை தோன்றுவதற்கு முன்னர் முடியமானரையில் வடக்கின் தமிழ் அடையாளத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகளை தீவிரப்படுத்தியிருக்கின்றனர்.

இதனை தமிழ்த் தேசியம் பேசுவோர் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றனர்? எதிர்கொள்ள முடியுமா? இவ்வாறான விடயங்களை இடைக்கால நீண்ட கால அடிப்படையில் எதிர்கொள்வதற்கான மூலோபாயம் ஒன்றை இதுவரையில் தமிழ்த் தேசியம் பேசுவோரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்த இயலாமைகளின் மத்தியில்தான் சிங்கள ஆளும் தரப்பு தங்கள் நிகழ்ச்சிநிரலை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. விடுதலைப்புலிகள் இருக்கும் வரையில் வடக்கு, கிழக்கில் சிங்கள–பௌத்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க முடியவில்லை. 2009 இற்கு பின்னர் வட, கிழக்கு சுழல் திறந்தவெளி போன்றாகி விட்டது. ஒருபுறம் வட, கிழக்கின் காணிகளை உல்லாச பயணத்துறை, வன விலங்குத் துறை, படைத்துறை விரிவாக்கம், வலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் – என்னும் பல்வேறு பெயர்களில் கபளீகரம் செய்துவருகின்றது. தொல்பொருள் மயமாக்கல் என்பது அடிப்படையில் பௌத்த மயமாக்கல் தான்.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்பதன் பொருள் பௌத்தர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்பது தான். இதனை சட்ட ரீதியில் எதிர்கொள்ள முடியுமென்று ஒரு கறுப்புகோட்' அணியினர் வாதிடுகின்றனர். ஆனால் கேள்வி – அவ்வாறு சட்டத்துறையின் ஊடாக இவற்றைத் தடுக்க முடியுமென்றால் – இதுவரையில் ஏன் இந்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை? ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், தமிழ்த் தேசிய அரசியல் முற்றிலுமாக கறுப்புகோட் (20ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# பிள்ளையார் கோவில்களை அழிக்கும் கிறிஸ்தவர் முஸ்லிம்களுக்கு உரிதான நாடல்ல இலங்கை

பிள்ளையார் கோயில்கள் சாத்தானின் கோயில்கள் எனக் கிறித்தவர் கருதினால், பிள்ளையார் கோயில்கள் உருவ வழிபாட்டு இடங்கள் காபிர்களின் உறைவிடங்கள் என முகமதியர் கருதினால், இலங்கை அவர்களுக்குரிய நாடு அல்ல. அவர்கள் கருத்தும் அவர்கள் நோக்கமும் கொண்ட நாடுகள் பல உலகில் உள்ளன. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவரும் சைவப் பெரியாருமான மறவன்புலவு க.சச்சிதானந்தம்



வலிகாமம் பகுதி யில் களவாடப்பட்ட பிள்ளையார் சிலைகள் தொடர்பில் பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். இதைத் தொடர்ந்து பல சைவ ஆலயங்களில் களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இது குறித்து மறவன்புலவு சச்சிதானந்தம் விடுத்த அறிக்கை அப்படியே வருமாறு.

சூசைராசா கஜீபன் கிறித்தவர். வலிகாமத்தில் உடைத்த பிள்ளையார் சிலைகள் தொடர்பில் முதலில் கைதானவர் சூசைராசா. அந்தப் பிள்ளையார் சிலைகள் போய்ச் சேர்ந்தன முகமதியரின் வணிக நிறுவனத்திடம். கொழும்பு ஆர்மர் தெரு பாத்திமா பள்ளிக்கு முன்புள்ள முகமதியர் வளாகத்தில் வலிகாமம் சிலைகள் உள்ளிட்ட 17 பிள்ளையார் சிலைகள் பல சிவலிங்கங்கள் மற்றும் சைவக் கோயில் சிலைகளை கண்டு பிடித்த காவல்துறையினரைப் பாராட்டுகிறேன்.

இந்தச் சிலைகள் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழர் வழிபட்ட தொல்லியல் கூறுகள். இவற்றை உடைத்தவர், இவற்றைப் பெயர்த்தவர், இவற்றைக் கொண்டு சென்ற வாகனத்தார், சேமித்து வைத்த முகமதிய வளாகத்தார் யாவரையும் தொல்பொருளியல் சட்டங்களில் பிணையில் விடமுடியாத சட்டங்களின் கீழ் கைது செய்து உடனடியாக சிறையில் அடைக்குமாறு காவல்துறையை கேட்டுக்கொள்கிறேன்

சைவர்களின் நம்பிக்கையின் அடையாளம் பிள்ளையார். சைவர்களின் உணர்வுகளின் உறைவிடம் பிள்ளையார். கிறித்தவர் உடைக்கிறார். முகமதியர் பின்னணியில் உள்ளார். ஆபிரகாமிய மதத்தவர் இலங்கைச் சைவ மரபுகளை உடைத்தெறியும் கண்ணோட்டத்தின் வெளிப்பாடு எனக் கொள்ளலாமா?

வலிகாமத்தில் நிகழ்ந்தவை முதல் நிகழ்வுகள் அல்ல. ஏற்கனவே வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி, வன்னியில் போர்க்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களின் நிகழ்வுத் தொடர்ச்சியே கடந்தவாரம் வலிகாமத்தில் 5 பிள்ளையார் கோவில் சிலைகள் உடைப்பு. கிறித்தவரும் முகமதியரும் சைவ மரபுகளைஅழிக்க உந்துதல் கொடுப்பவர் யார்?

வவுனியா செட்டிகுளம்மன்னார் தள்ளாடி, ஆட்காட்டிவெளி, வெள்ளாங்குளம், சிலாவத்துறை,மடு – பரப்புக்கடந்தான், பூநகரி கேரதீவு, தென்மராட்சி – மிருசுவில், அம்பாறை கஞ்சிக்குடியாறு

எனத் தொடர்ச்சியாகப் பிள்ளையார் சிலைகளை உடைப்பதிலும் பிள்ளையார் கோயில்களை அகற்றுவதிலும் ஆகக் கிறித்தவரும் முகமதியரும் இணைந்து முனைந்துள்ளனர்.

கிறித்துவ மதத் தலைவர்களோ முகமதிய மதத் தலைவர்களோ தத்தம் மதத்தவர் இவ்வாறு செய்வதால் இலங்கையில் மத நல்லிணக்கம் சிதறும் தமிழரிடையே பிளவு வரும் என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை. சைவரிடம் இது காறும் மன்னிப்புக் கோரவில்லை.

கிறித்தவ மதத் தலைவர்கள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலும் பிள்ளையார் சிலைகளை உடைப்பதை ஊக்குவிக்கிறார்கள். இப்பொழுது வலிகாமத்தில் நிகழ்ந்தவற்றை கிறித்தவ, முகமதிய மதத்தலைவர்கள் ஊக்குவிக்கிறார்களா? வெளிப்படையாக அவர்கள் சொல்ல வேண்டும்.

பிள்ளையார் கோயில்கள் சாத்தானின் கோயில்கள் எனக் கிறித்தவர் கருதினால், பிள்ளையார் கோயில்கள் உருவ வழிபாட்டு இடங்கள் காபிர்களின் உறைவிடங்கள் என முகமதியர் கருதினால், இலங்கை அவர்களுக்குரிய நாடு அல்ல. அவர்கள் கருத்தும் அவர்கள் நோக்கமும் கொண்ட நாடுகள் பல உலகில் உள்ளன. சைவக் கோயில்கள் உள்ள நாடுகளே திருக்கயிலாயம் தொடக்கம் கதிர்காமம் வரை நீண்டு காந்தாரம் தொடக்கம் ஐராவதி வரை அகன்ற பரத கண்டம். யுகங்கள் ஊடாகப் பிள்ளையாரை வழிபட்டு வந்தவர்கள் வருபவர்கள் இந்த நிலப்பரப்பில் வாழ்பவர்கள். தமிழர், சிங்களவர் என வேறுபாடின்றி அனைவரும் பக்தியோடும் பரவசத்தோடு உணர்வோடும் மண்ணின் மைந்தர்களாய்ப் பிள்ளையாரை வழிபடுகின்ற தீவே இலங்கைத் தீவு.

இங்குள்ள பிள்ளையார் கோவிலை

இடிக்க முயல்பவர்கள் ஆபிரகாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள். பிள்ளையார் கோவிலை உடைக்க ஊக்குவிக்கும் ஆபிரகாமிய மதக் கும்பல்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறினால் சைவர்கள் தம் உணர்வின் அடையாளங்களை, தம் நம்பிக்கையின் இருப்பிடங்களைப் பக்தியோடும் வழிபாட்டோடும் பண்பாட்டோடும் இணைத்துத் தம் முன்னோர் விட்ட வழியில் வாழ்வர் என்றுள்ளது

# யாழ்ப்பாணத்தில் திருடப்பட்ட 20க்கு மேற்பட்ட சிலைகள் கொழும்பில் முஸ்லிம் கடையில் மீட்பு!


காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உள்பட பல இடங்களில் இந்து ஆலயங்களில் திருடப்பட்ட 20 மேற்பட்ட விக்கிரகங்கள் கொழும்பில் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரம் மற்றும் நவக்கிரி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் இந்த விக்கிரகங்கள் தென்னிலங்கையில் உள்ள வர்த்தகர்களுக்கு விற்பனை செய்ய முகவர்களாக செயற்பட்டுள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

டிசம்பர் 9 ஆம் திகதிக்கும் டிசம்பர் 23 ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது அலைபேசியில் திருடப்பட்ட விக்கிரகங்கள் பலவற்றின் ஒளிப்படங்களும் காணப்பட்டன. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்றைய தினம் 2 விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன.



அவை இரண்டும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. சந்தேக நபரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் கொழும்புக்கு விரைந்த உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான குழுவினர் அங்கு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மேலும் 20 இற்கு மேற்பட்ட விக்கிரகங்களை மீட்டனர். அவற்றை கொள்வனவு செய்த வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் பல இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட விக்கிரகங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன என்று பொலிஸார் கூறினர்.

# குருந்தூர்மலையில் பௌத்த நிர்மாணங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுப்பு!



முல்லைத்தீவு. குருந்தூர் மலையில் பௌத்த அடையாளங்களை நிரந்தரமாக நிறுவும் நிர்மாணப்பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. முன்னதாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனையில் அமையப்பெற்ற குருந்தூர் மலையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் அகழ்வாராச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

குருந்தூர் மலையில் நான்கு மாதங்களாக நடைபெற்ற ஆய்வுகளின்போது அங்கு யாரும் செல்வதற்கு அனுமதிகள் மறுக்கப்பட்டு படையினரின் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் தொல்லியல் திணைக்களத்திடம் அகழ்வாராய்ச்சி பணிகள் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில் திடீரென கொரோனா சுகாதார விதிமுறைகளை மீறி அவசர அவசரமாக முற்றுமுழுதாக படையினரின் ஏற்பாட்டில் குருந்தாவசோக ராஜ்மாஹா விகாரைக்கான பிரித்ஓதல் வழிபாடுகள் இடம்பெற்று விகாரை பூசைகள் தொடங்கி வைக்கப்பட்டன. பின்னர், இந்துக்களின் வழிபாட்டு உரிமையை மறுதலிக்ககூடாது என்றும் அங்குள்ள இந்து வழிபாட்டு இடங்கள் அகற்றப்படக் கூடாது என்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் குருந்தூர் மலையில் எவ்விதமான நிர்மாணங்களும் மேற்கொள்ளக் கூடாது என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் குருந்தூர் மலையில் (20ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்புக்கு காரணம் என்ன?

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிடும் தினம் முதலாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.இந்தக் கடிதத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்பதே இதற்குக் காரணம் என்று நம்பகமான வட்டாரங்கள் ஈழநாடுவுக்கு தெரிவித்தன. இதனிடையே முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் ஒன்றை எட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான முயற்சியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ முன்னெடுத்தது. அதில் தமிழ்த் தேசிய கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் என 11 கட்சிகள் ஒன்றிணைந்தன. இந்தியப் பிரதமருக்கான கடிதத்தின் வரைவை இந்தக் கட்சிகள் கூடித் தீர்மானித்தன. இந்த வரைவு இறுதி செய்யப்பட்டு விட்டதாகவும் கட்சித் தலைவர்கள் அநேகமாக கையொப்பமிடுவர் என்றும் இதன் ஒருங்கிணைப்பாளரும் வரைவை தயாரித்தவருமான ரெலோகட்சியின் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் முஸ்லிம் கட்சிகள் வடக்கு, கிழக்கு இணைப்பு உள்ளிட்ட சில விவகாரங்களில் முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்பு காட்டின. இதனால் உட்கட்சி முரண்பாட்டை காரணம் காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கடிதத்தில் கையொப்பமிடுவதில் சிக்கல் நிலவுவதாக தெரிவித்தது. எனினும், அந்தக்கட்சி உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. இதே விடயத்தையே மற்றொருமுஸ்லிம் கட்சி யான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் உள்ளது. எனினும், அந்தக் கட்சியின் செயலாளர் தாம் கால அவ காசத்தை கோரியுள்ளதாக எமக்கு தெரி வித்தார்.

இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இரு கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதேவேளை இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிடுவதில் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இரு நிலைப்பாடு தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மறுத்துள்ளார். ரெலோவுடன் தமிழ் அரசுக் கட்சி இணைந்து எடுத்த முடிவில் கட்சி உறுதியாக நிற்கும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கான 13வது திருத்தம் தொடர்பில் தமிழ் கட்சிகள் தயாரித்திருக்கும் ஆவணத்தில் தாம் கையொப்பமிடமுடியும். எனினும் அதற்கு அப்பால் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான விடயங்களும் குறித்த ஆவணத்தில் வலியுறுத்தப்படுமானால, அதில் கையொப்பமிடமுடியாது என்று முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார் தென்னிலங்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் மத்தியில் வசிக்கின்ற நிலையில் சுயநிர்ணய உரிமைகள் குறித்த கருத்தை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் ஹட்டனில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழத்து -இந்தியக் கலைஞர்களோடு
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு 416 841 9600

# முன்னாள் யாழ்.கோட்டை இராணுவத்தளபதியும் இந்நாள் பௌத்த தேரருமான புத்தங்கல ஆனந்ததேரர் மறைவு!



அம்பாறை புத்தங்கல விகாரையின் தலைமை தேரரான வண. புத்தங்கல ஆனந்த நாயக்க தேரர் தனது 78 ஆவது வயதில் 28 டிசம்பர் 2021 செவ்வாய்க்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார்.

வண. ஆனந்த தேரர் துறவறத்தில் பூணுவதற்கு முன்னதாக 1964ம் ஆண்டு மார்ச் 26ம் திகதி இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டிருந்ததோடு இலங்கை இராணுவ சிங்கப்படையின் வீரராக 34 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றியிருந்தார்.

மேஜர் ஜெனரலாக 1998 ஏப்ரல் 29 ஆம் திகதி அவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றதுடன் அதற்கு முன்னதாக 1980களில் சிவில் கலவரங்கள் உக்கிரமடைந்த காலத்தில் (ஓய்வு) மேஜர் ஜெனரல் ஏ.ஜி வீரசேகர என்னும் அவர் பல்வேறு முக்கிய நியமனங்களை வகித்துள்ள அதேவேளை பாராட்டத்தக்க சேவைகளையும் ஆற்றியுள்ளார்.

2007 மே மாதத்தில் புத்தங்கல ஆனந்த என்ற பெயரில் துறவறத்தை ஏற்ற தேரர், பல தம்ம புத்தகங்களை எழுதியுள்ளதோடு பல மொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த வேளை அன்றைய யாழ்.பிராந்திய விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு அவர்களுடன் மிக நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தவர். விடுதலைப்புலிகள் முதன் முதலாக நடத்திய கைதிகள் பரிமாற்றத்தின் போது யாழ்.கோட்டையில் இருந்து வெளியே வந்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்போடு யாழ்.நகரைச்



சுற்றிப் பார்த்தவர். இவரோடு இணைந்து கப்டன் கொத்தலாவலை அவர்களும் கோட்டைக்கு வெளியே வந்திருந்தார். இந்தக் கைதிகள் பரிமாற்றத்தின் மூலமே விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அருணாவும் போராளி காமினியும் விடுதலையானார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாண நீதிபதியாக விளங்கிய இளஞ்செழியன் அவர்களது மெய்பாதுகாவலர் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட போது நீதிபதி இளஞ்செழியன் அவர்கள் நடந்து கொண்ட இரக்க சிந்தனையுடன் கூடிய மனிதாபிமானத்தைப் பாராட்டுவதற்காக நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு வண.புத்தங்கல ஆனந்ததேரராக வருகை தந்திருந்தமையும் நினைவு கொள்ளத்தக்கது.

இவர் இன்றைய பொதுப் பாதுகாப்பு அமைச்சரும் தமிழின விரோதியுமான அட்மிரல் சரத் வீரசேகரவின் மூத்த சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

LAW OFFICE
of
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த
சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை
Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக நம்பி ஏமாறப் போகிறோமா? ஐங்கரநேசன் கேள்வி!

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் போய் விட்டு வந்து இராஜதந்திரம் என்று கூறுவதை நாங் கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோமா என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கர நேசன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற் பாட்டில் சமகால அரசியல் உரை யரங்கொன்று 24 டிசம்பர் 2021 யாழ்ப்பா ணத்தில் இடம் பெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

ஒரு சிலர் இராஜதந்திரம் என்று கூறு கின்றனர். அவர்கள் நல்லாட்சி அரசின் காலப்பகுதியிலும் அதனையே கூறினர். இன்றும் அதனையே கூறுகின்றனர்.

இராஜதந்திரம் என்பது நாடுகளுக்கு ரியது. நாடுகள் பல்வேறு வகையான அழுத்தங்களைப் பிரயோகித்து தங்களு க்கு வேண்டியதை சாதித்துக் கொள்வ தையே இராஜதந்திரம் என்பர். ஆனால் விடுதலைப் புலிகள் இருந்த காலப் பகுதியில் அவர்கள் அரசுக்கான கட்ட மைப்புக்களை கொண்டிருந்ததன் கார ணமாக இராஜதந்திர பக்கம் இருந்தது. அன்டன் பாலசிங்கம் அந்த பாத்திரத்தை செய்திருந்தார். இன்று எல்லோருமே விடுதலைப் புலிகளாகவோ விடுதலைப் புலிகளின் தலைவராகவோ அன்டன் பாலசிங்கம் போலவோ ஆகிவிட முடி யாது.

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் போய்விட்டு வந்து இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகின்றது. அரசியல் கட்சிகளின் கூட்டு எதையும் சாதித்து விடப் போவதில்லை. நாளை தேர்தல் நடந்தால் இந்த கட்சிகள் எல்லாம் எதி ரும் புதிருமாக இருக்கும்.

13வது திருத்தம் தொடர்பாக கட்சிகள் ஒன்று கூடுகின்ற பொழுதே உள்ளூ ராட்சி சபை வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அந்த கட்சிகள் ஆளாளு க்கு குழிபறித்து தோற்கடிக்கின்றனர்.



உள்ளூராட்சி மன்றங்களிலேயே இந்த கட்சிகள் இவ்வாறு செயற்பட்டால் நாடாளுமன்றத்திலும் மாகாணசபை யிலும் இந்த கூட்டு எந்தளவு தூரத் திற்கு செயற்படப் போகிறது. ஆகவே இந்த இடத்தில் சிவில் சமூகத்தின் பங்க ளிப்பு மற்றும் பிரசன்னமும் அவசியம்.

அவர்களது கை ஓங்கி இருக்கின்ற பொழுது தான் கட்சி சார் அரசியல்வாதி களை ஓரளவு கட்டுக்கோப்பாக வைத் திருக்க முடியும்.

எங்களிடம் கட்சிகள் இருக்கின்றது. தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தேசிய தலைவர் என்று இல்லை. ஆனால் கட்சிகளின் தலைவர்கள் தங்களை தேசிய தலைவர்களாக கற் பிதம் செய்து கொள்வது அபத்தமானது என்றார்.

# அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு மேஜர் ஜெனரல் உதய பெரேராவிற்கும் அனுமதி மறுப்பு!



இலங்கையின் இன்னுமொரு இராணுவ அதிகாரிக்கும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு ள்ளதாக ஐலண்ட் தெரிவித்துள்ளது.

2009 முதல் 2011 வரை மலேசியா விற்கான பிரதி உயர்ஸ்தானிகரான மேஜர் ஜெனரல் உதயபெரேராவிற்கே குடும்பத்தினருடன் அமெரிக்காவிற்கு விஜயம் மேற் கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது அவரை யுத்த குற்ற சந்தேகநபர் என அமெரிக்கா அடையாளப்படுத்தியுள்ளது என ஐலண்ட் தெரிவித்துள்ளது.

டிசம்பர் ஐந்தாம் திகதி உதயபெரேரா தனது குடும்பத்தினருடன் அமெ ரிக்கா செல்வதற்காக கொழும்பிலிரு ந்து சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் பயணிப்பதற்காக குடிவரவு பகுதிக்கு சென்றவேளை அவருக்கு அமெரிக்கா வின் தீர்மானம் குறித்து தெரிவிக்கப் பட்டதாக ஐலண்ட் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூ ர் எயர்லைன்ஸ் பணியாளர் கள் அமெரிக்காவிலிருந்து தங்களிற்கு அது குறித்த செய்தி கிடைத்து ள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து உதயபெரேரா பயணத்தை இரத்துச் செய்துள்ளார் ஆனால் அவரது குடும்பத்தவர்கள் அமெரிக்கா சென்றுள்ளனர்.

# மீண்டும் இந்திய "றோ"?

விடுதலைப்புலிகளை அரசியல் அரங்கில் இல்லாமல் ஆக்கிய பின் ஓய்ந்திருந்த றோ தனது பணிகளை தற்போது மீண்டும் முடுக்கியுள்ளதாம். இலங்கைக்கான சீனத் தூதுவர் குஷி யென் ஹோங்சோவின் வடபகுதி விஜயத்தின் பின்னர், இந்தியாவின் றோ புலனாய்வு சேவை, வடக்கில் உள்ள உளவு அணியை அதிக ரித்துள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சாவக்கச்சேரியில் சைனா கமியூ னிகேஷன் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் அலுவலகம் திறக்கப் பட்டுள்ளமை குறித்து றோ கூடிய கவனத்தை செலுத்தியுள்ளது. அத்துடன் சீன மக்கள் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், சீனத் தூதுவருடன் வடபகுதிக்கு விஜயம் செய்தமை தொடர்பாகவும் (20ம் பக்கம் பார்க்க)

தற்பொழுது Markham நகரிலும்
(Near 14th Ave & McCowan Rd)

**Math & Physics Tutoring**
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
Locations: Brampton (Near Bovaird Rd & Brisdale Dr)
Markham (Near 14th Ave & McCowan Rd)
Tel: 416-524-0424

# இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13, தமிழர் அரசியல்

அனைவருமாக இணைந்து இந்தியா விடம் ஒரு கோரிக்கையை முன் வைப்பது தொடர்பில் 11 தமிழ் கட்சி களிடையே இணக்கப்பாடு ஏற்பட்டிரு க்கின்றது. இது ஒரு வரலாற்று சம்பவம். இந்த முயற்சி ஆரம்பிக்கப் பட்ட நாளிலிருந்து இதனை குழப்பு வதற்கும் பல முயற்சிகள் இடம் பெற்றிருந்தன. தேசியத்தை கைவிட்டு விட்டனர், 13இற்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முடக்க முற்படுகின் றனர், 1987இற்கு பின்னர் இத்தனை உயிர்கள் போனதெல்லாம் எதற்காக



இப்படியான பலவாறான அலங்கார நச்சு வரிகள் இதற்காக பயன்படுத்தப்பட்டன. எனினும் இந்த விடயத்தில் அனைத்து தரப்பினரும் உறுதியாக இருந்தமை யால் இந்த முயற்சி இணக்கப்பாட்டை எட்டியிருக்கின்றது.

ஆரம்பத்தில் இந்த முயற்சியில் இணைந்து கொள்ளாத இலங்கை தமிழரசு கட்சி இறுதியில் இணைந்து கொண்டது. எனினும் இறுதி ஆவண த்தில் அனைவரும் கையெழுத்திடும் வரையில் இந்த முயற்சியின வெற்றி எதோவொரு வகையில் ஊசலாடிக் கொண்டு தான் இருக்கின்றது.

சம்பந்தன் ஒரு வேளை மேலும் இழுத்தடித்து மேலும் குழப்பலாம். ஒரு வேளை சம்பந்தன் தொடர்ந்தும் இழுத்தடித்தால் அவர் இந்தியாவை நோக்கிச் செல்வதை விரும்பவில்லை என்பதே அதன் பொருள். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் சம்பந்தனை தவிர்த்து விட்டு விடங்களை முன்னெ டுப்பது தான் சரியானது. ஒரு தனி நபருக்காக இத்தனை கட்சிகள் காத்திருக்க வேண்டியதில்லை.

இந்த முயற்சியுடன் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து கொண்டிரு ந்தால் இன்னும் சிறப்பாக இருந்திரு க்கும். 13வது திருத்தச் சட்டத்தை ஒரு ஆரப்பப்புள்ளியாக கூட ஏற்க முடியாதென்னும் நிலைப்பாட்டை கஜேந்திரகுமார் வெளிப்படுத்தி வருகின் றார். ஆனால் உண்மையில் இது 13வது திருத்தச்சட்டம் தொடர்பான விடயமல்ல. அடிப்படையில் இது இந்தியாவை கையாளுவது தொடர் பான விடயமாகும்.

அதே வேளை கூட்டமைப்பின் கட்சி களோ அல்லது இதற்கு ஆதரவு தெரி வித்திருக்கும் ஏனைய தமிழ் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகள் எவையுமே, 13வது திருத்தச்சட்டம் தமிழ் மக்களு க்கான அரசியல் தீர்வு என்று எந்த வொரு இடத்திலும் கூறவில்லை. அதனை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. 13வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப் பட்ட காலத்திலேயே இது தொடர்பில் இந்திய தரப்பிற்கு விபரமாகவே சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனவே 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் இப்போது வகுப்பெடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்த விடயத்தை சற்று மாறுபட்ட வகையில் சிந்திக்க வேண்டும். 13வது திருத்தச் சட்டத்திற்குள் என்ன இருக் கின்றது? இப்படிக் கேட்பவர்கள் சமான்யர்கள். ஆனால் இன்றைய அரசியல் சூழலில் 13வது திருத்தச் சட்டத்தை ஏன் கையிலெடுக்க வேண்டும்? அதன் முக்கியத்துவம் என்ன? இந்த அடிப்படையில் சிந்தித் தால் அது ஒருவரது அரசியல் முதிர்ச்சியை காண்பிக்கும். இப்போது தமிழ் மக்களுக்கு தேவை ராஜதந்திர நோக்கிலான அரசியல் நகர்வுகளாகும். வெறும் சுலோகங்களும் வெற்று நம்பிக்கைகளும் பயனற்றவை. இந்த அடிப்படையில்தான் தற்போது முன்னெ டுக்கப்பட்டு வரும் முயற்சியை நாம் பார்க்க வேண்டும். ஒரு புறம் கோட்ட பாய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வருகின்றது. வாய்ப்பு கிடைத்தால் மாகாண சபை முறை மையை முற்றிலும் இல்லாமலாக்கு வது தொடர்பிலேயே அவர்கள் சிந்திக் கின்றனர். மாகாண சபைக்கு மாறாக மாவட்ட சபை முறைமையொன்றை முன் வைப்பதற்கும் அவர்கள் முயற்சி ப்பதாக தெரிகின்றது. அதே வேளை தற்போதிருப்பதை விடவும் மத்தியில் மேலும் அதிகாரங்களை குவிப்பதற் கான ஜனாதிபதியை மேலும் அதிகார முள்ளவராக ஆக்குவதற்கான முயற்சி யாகவே அவர்களது அரசியல் யாப்பு இருக்கும். அப்படியானதொரு அரசி யல் யாப்பு வருவது நல்லதா அல் லது இப்போது இருக்கின்ற ஓரளவு பாதுகாப்பு ஏற்பாடுகளையாவது பாது காத்துக் கொள்வது சிறந்ததா? இப்போதிருக்கும் ஓரளவு சாதகமான விடயங்களை கூட இல்லாமலாக் குவதை ஆதரிப்போர் உண்மையில் யாருடைய சேவகர்கள்? ஏனெனில் அதுதான் கோட்டபாய ராஜபக்ச தரப்பின் இலக்கு.

இலங்கையின் மீதான சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் ஆரவாரமான தமிழ் கதைகள் பல சொல்லப்பட்டா லும் கூட கடந்த 12 வருடங்களில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் எவையும் இடம் பெறவில்லை. குறிப்பாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எந்த வொரு முன்னேற்றகரமான விடயங் களும் இதுவரையில் நடைபெற வில்லை. கட்சிகளுக்கிடையிலான கொழும்பு சந்திப்பின் போது சம்பந்தன் தான் 13வது திருத்தச்சட்டத்தை தாண்டி சென்று விட்டதாக வாதிட்டி ருக்கின்றார். இதற்கு முன்னரும் பல வேறு சந்தர்பங்களில் அவர் இப்படித் தான் கூறியிருக்கின்றார். ஆனால் சம்பந்தனின் முயற்சிகள் எவையாவது செயல் வடிவம் பெற்றிருக்கின்றதா? அரசியல் தீர்வு விடயத்தில் கடந்த 12 வருடங்களில் சம்பந்தன் சாதித்தது என்ன? 13வது திருதத்தை ஒர் ஆரம் பப் புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறும் கஜேந்திரகுமார் சாதித்தது என்ன? இதுவரை விவாதி க்கப்பட்ட அனைத்துமே உதட்டளவு விடயங்கள் மட்டும் தான். செயலில் எதுவும் நிகழவில்லை.

இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச் சினை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயற்சிகளில் இன்றுவரையில் நின்று நிலைக்கும் ஒரேயொரு விடயம் 13வது திருத்தச்சட்டத்தின் அடிப் படையலான மாகாண சபை முறைமை ஒன்று தான். இதற்கு காரணம் அது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அங்க மாக இருப்பது தான். இந்த விடயமும் இல்லாதொழிக்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கு இலங்கைத் தீவில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு சாதகமான விடயமும் கைநழுவி விடும். இது தொடர்பில் தமிழர்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் சிலர் வாதி டலாம் ஆனால் அவ்வாறு கூறுபவர் களிடம் இருக்கின்ற மாற்று திட்டம் என்ன? அவர்களால் தங்களின் மாற்று திட்டங்களை மக்கள் முன் வைக்க முடியுமா? வரலாம் வரக் கூடும், அப்படியும் இப்படியும் நடக்கலாம் என்று கூறுவதை எவர் வேண்டுமானா லும் சொல்லி விட்டுப் போகலாம். அதற்கு அரசியல் ஞானம் தேவை யில்லை. சாமானிய அறிவு போது மானது. ஒரு விளைச்சல் பற்றி ஆடம் பரமாக வர்ணிக்கலாம்- ஆனால் அறுவடையென்பது இறுதியாக அடுக் கப்படும் நெல் மூட்டைகளின் எண்ணி க்கையாகும்.

1972, 1978 அரசியல் யாப்புக்களை தமிழ் தலைமைகள் ஏற்றுக் கொண்டி ருக்கவில்லை. தமிழ் மக்களின் பங்கு பற்றலின்றியே அரசியல் யாப்புக்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் தமிழர் களால் என்ன செய்ய முடிந்தது? தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத அரசியல் யாப்பின் கீழ் தானே தமிழர் கள் ஆட்சி செய்யப்பட்டனர். இது வரையில் தமிழ் தலைமைகள் சிங்கள தலைமைகளோடு மேற்கொண்ட உடன்பாடுகள் எவையுமே வெற்றி பெறவில்லை. இதில் இறுதியாக இடம் பெற்றது தான் கூட்டமைப்பு 2015 கூட்டரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பிற்கான முயற்சி.

இவ்வாறு சிங்கள தரப்புகளோடு செய்யப்பட்ட உடன்பாடுகள் ஒரு தலைப்பட்சமாக கிழித்து வீசப்பட்ட போது, தமிழ் தலைமைகளால் என்ன செய்ய முடிந்தது? தமிழ் மக்களின் நியாயத்திற்காக எவர் வந்து தலையீடு செய்தார்? இந்த நிலையில் மீண்டு மொரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் கூட புதிய அரசியல் யாப்பிற்கான முயற்சியொன்றில் ஈடுபடுவதற்கான வாய்பில்லை. ஏனெனில் ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் தோல்வி அவர்களுக்கான படிப்பினையாக இரு க்கும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப் படையிலான 13வது திருத்தச்சட்ட த்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும், அதற்கான பொறுப்பு இந்தியாவிற்குண்டு என்னும் கோரிக் கையை தமிழ் பேசும் கட்சிகள் அனை த்தும் ஒரு குரலில் முன் வைக்க முயற்சிக்கின்றனர். இதில் என்ன தவறுண்டு? இந்த முயற்சி அடிப் படையில் எதேச்சாதிகார அரசியல் யாப்பு ஒன்றை எதிர்ப்பதற்கான முதல் அடியாகும்.

ஏனெனில் கோட்டபாய ராஜபக்ச அணி யினர் புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டு வருவதன் ஊடாக 13வது திருத்தச் சட்டத்தில் அவர்களுக்கு நெருடலாக இருக்கின்ற விடயங்களை தூக்கிவிடலாம் என்றே எண்ணுகின்ற னர். இந்திய வெளிவிவகார செயலரு டனான சந்திப்பின் போது 13வது திருத்தச் சட்டத்தில் சாதகமான அதே வேளை பாதகமான அம்சங்கள் இருப் பதாக கோட்டபாய குறிப்பிட்டிருந்தார். அது என்ன பாதகமான அம்சங்கள்? 13வது திருத்தச்சட்டத்தில் உள்ளடங்கி யுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் அத்துடன் இரண்டு மாகாண சபைகள் இணைந்து செயற் பட முடியுமென்னும் ஏற்பாடுகளைத் தான் அவர் பாதகமான விடயங் களென்று கூறுகின்றார். இவ்வாறான தொரு சூழலில் தமிழ் கட்சிகள் என்ன செய்ய வேண்டுமோ அதனைத் தான் தற்போது அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து மேற்கொண்டிருக் கின்றன. இந்தியாவை நோக்கி செல்ல வேண்டுமென்னும் வாதத்தை இந்த கட்டுரையாளர் 2010இலிருந்து முன் வைத்து வருகின்றார். ஏனெனில் அருகிலிருக்கும் பிராந்திய அரசை தவிர்த்து விட்டு உலகெங்கும் அலை வதால் பயனில்லை. இந்தியாவை தவிர்த்து புறம்தள்ளி எந்தவொரு நாடும் ஈழத் தமிழர்களுக்கு உதவப் போவதில்லை. இதுதான் ஈழத்

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**– யசீந்திரா –**



தமிழர்களுக்கான புவிசார் அரசியல் தலையெழுத்து.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை வலியுறுத்துகின்றோம் ஆனால் 13யை நிராகரிக்கின்றோம் என்று ஒரு சிலரும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றோம் ஆனால் 13வது திருத்தச் சட்டத்தை ஒரு ஆரம்ப புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள மாட்டோமென்று இன்னும் சிலரும் வாதிடுவதை காண முடிகின்றது. உண்மையில் இந்த இரண்டு வாதங் களும் அப்பாவித்தனமானவை.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் உரு வாகியதன் பின்னால் இந்தியாவின் நலன்கள் பற்றி கரிசனை இருந்தது உண்மையாயினும் ஒப்பந்தத்தின் அடி நாதமாக இருந்தது, இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை காண்பதுதான். அது எப்படியான தீர்வாக இருக்க வேண்டுமென்பது தொடர்பில் தான் திம்பு பேச்சுவார்தை யில் விவாதிக்கப்பட்டது. எனினும் ஜெயவர்த்தன அரசாங்கம் பல்வேறு கோரிக்கைகளை ஏற்க மறுத்த காரண த்தினால் தமிழ் தலைமைகளின் முழு மையான எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வில்லை. எனினும் தான் எடுத்துக் கொண்ட விடயத்தில் பின்வாங்க விரும்பாத ராஜீவ்காந்தி மாகாண சபை முறைமையின் கீழான அரசியல் தீர்வொன்றை ஏற்குமாறு தமிழ் தலைமைகளை கோரினார். முதலில் இதனை ஏற்றுக் கொள்ளுங்கள், பின் னர் நீங்கள் எதிர்பார்க்கும் விடயங் களை நான் செய்து தருவேன் என்றும் அவர் குறிப்பிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த பின்புலத்தில் வந்தது தான் இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டம். 1987 நவம்பர் மாதம் இந்த சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1988இல், ஜெயவர்த்தன, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒரு அலகாக இணைப்பதாக அறிவித்தார். 1988 நவம்பர் மாதத்தில் இணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இதனை ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் அப் போதிருந்த தமிழர் விடுதலை கூட்டணி தேர்தலில் போட்டியிட மறுத் திருந்த நிலையிலும் தான் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, பரந்தன் ராஜன் தலைமையிலான ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ஆகியவை தேர்தலில் போட்டியிட்டிரு ந்தன. 1988 டிசம்பரில் அன்னாமலை வரதராஜப்பெருமாள் இணைந்த வட கிழக்கு மாகாணத்தின் முதல் முதல மைச்சரானார். பிரேமதாச விடுதலைப் புலிகள் உடன்பாட்டை தொடர்ந்து, 1990 மார்ச்சில் இந்திய அமைதிப் படைகள் இலங்கையிலிருந்து வெளி யேறுவதற்கான ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன (20ம்பக்கம் பார்க்க).

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

18 டிசம்பர் 2021 முதல் 24 டிசம்பர் 2021 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஏழாவது ஆன்டு நினைவு நாள் 31 டிசம்பர் 2021 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 29வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி இரத்தினசபாபதி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு தினம் 30 டிசம்பர் 2021 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 11வது ஆண்டு நினைவுநாள் 25 டிசம்பர் 2021 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினம் தம்பி முத்து அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு ஏகாம்பரம் லோகேஸ்வரன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஏகாம்பரம் லோகேஸ் வரன் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 24 டிசம்பர் 2021 வெள்ளிக்கிழமை யாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைாவக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஏகாம்பரம் லோகேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைஞ்சலி



### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்
### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 டிசம்பர் 2021 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை நத்தார் தின அன்பளிப்பாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை நத்தார் தின அன்பளிப்பாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.


25 டிசம்பர் 2021 சனிக்கிழமை நத்தார் தின அன்பளிப்பாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கந்தசாமி குணபாலன் சுவாமி அவர்கள் ஐயப்பன் உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிமுத்து இரத்தினம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 டிசம்பர் 2021 சனிக்கிழமை நத்தார் தின அன்பளிப்பாக கனடாவில் வசிக்கும் திரு சச்சிதானந்தம் பொன்னம்பலம் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



26 டிசம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் - கனடாவில் அமைந்துள்ள வசந்தம் சுப்பர் மார்க்கட் உரிமையாளரும் தமிழ்த்தேசிய உணர்வாளருமான திரு சோமசுந்தரம் ரவீந்திரன் (ரவி) அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 டிசம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் - கனடாவில் அமைந்துள்ள வசந்தம் சுப்பர் மார்க்கட் உரிமையாளரும் தமிழ்த்தேசிய உணர்வாளருமான திரு சோமசுந்தரம் ரவீந்திரன் (ரவி) அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.


26 டிசம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் - கனடாவில் அமைந்துள்ள வசந்தம் சுப்பர் மார்க்கட் உரிமையாளரும் தமிழ்த்தேசிய உணர்வாளருமான திரு சோமசுந்தரம் ரவீந்திரன் (ரவி) அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 டிசம்பர் 2021 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிவபாதம் சிவலோகநாதன் அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் அன்றையதினம் திரு சிவபாதம் சிவலோகநாதன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 டிசம்பர் 2021 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியால் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 3வது ஆண்டு நினைவுநாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 5வது ஆண்டு நினைவுநாளையொட்டியும் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 டிசம்பர் 2021 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தனின் 33வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



28 டிசம்பர் 2021 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிசோரின் 10வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் கிசோர் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



29 டிசம்பர் 2021 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மசீலன் அர்ச்சனா தம்பதிகள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.


MERRY CHRISTMAS
&
HAPPY
2022
NEW YEAR
Happy Holidays
Jey. Paramanantham
Sales Representative
647.295.7784
Jey.Homelife@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
2021 Prestige Club Award
2011 Silver Award
2012 Gold Award
2013 Gold Award
2014 Diamond Award
2015 Diamond Award
2016 Chairman Award
2017 Chairman Award
2018 Chairman Award
2019 Chairman Award
2020 Chairman Award
2021 Prestige Club Award
Top 5% Sales Rep In Canada
HomeLife/Future Realty Inc.,Brokerage*
7 Eastvale Dr,Unit 205,Markham-On, L3S 4N8.
Off: 905.201.9977 Fax: 905.201.9929
*Independently Owned and Operated
www.jeydreamhomes.com



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2021 செவ்வாய்க்கிழமை முதல் 21-01-2022 வெள்ளிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக மாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும். அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தரும் போது கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**குருமாற்றம் மஹாயாகம்** - 13-11-2021 சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் காலை 11.00 மணிவரை பூசைகள் நடைபெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2021 திங்கட்கிழமை
மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2021
செவ்வாய்க்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
26-11-2021 வெள்ளிக்கிழமை, 27.11.2021 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 29-11-2021 திங்கட்கிழமை
காலை 9.00 முதல் மதியம் 12.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
03.12.2021 வெள்ளிக்கிழமை, 04.122.2021 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 12-12-2021
ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப சாந்தி** - 19-12-2021
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்**
25-12-2021 சனிக்கிழமை, 26-12-2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணிமுதல் மாலை 5:00 மணி வரை இடம் பெறும்.

**நெய் அபிஷேகம்**
27-12-2021 திங்கட்கிழமை, 28.12.2021 செவ்வாய்க்கிழமை
அதிகாலை 4.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
01.01.2022 - 02.01.2022 (சனி - ஞாயிறு ஆகிய இரு தினங்களும் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2022 சனிக்கிழமை முதல் 14-01-2022 வெள்ளிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2022 வெள்ளிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2022 வெள்ளிக்கிழமை மாலை
6.00 மணிக்கு இடம் பெறும்.



### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடக்க வேண்டும்.
2. மாலை அணிதல் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.
3. கோவிற்19 சுகாதார விதிகளுக்கு அமைவாக மாலை அணிதல் இடம் பெறும்.
4. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
5. இவ்வருடம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளுவதில்லை.
6. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் உள்விவகாரக் கொள்கையும் இல்லை?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது காரைநகரில் ஒரு சுயேச்சைக் குழு போட்டியிட்டது. அப்பிரதேசத்தில் காணப்படும் சமூக வேறுபாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட சில சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சுயேட்சைக்குழுவாக அது தேர்தலில் போட்டியிட்டது. எனினும் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவான தமிழ்தேசிய நிலைப்பாட்டை அக்கட்சி வெளிப்படுத்தியது. தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதே என்பதனை அந்த தேர்தல் அறிக்கை தெளிவாக வெளிப்படுத்தியது.

தேர்தலில் அச்சுயேச்சைக் குழு மூன்று ஆசனங்களைப் பெற்றது. எனினும் பிரதேச சபையை கைப்பற்றுவதற்கு தேவையான பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் ஏனைய கட்சிகளுடன் பேரம் பேச வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது அவர்களை இக்கட்டுரை ஆசிரியர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியோடு தொடர்புபடுத்தி விட்டார். எனினும் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவில்லை. காரணம் ஈபிடிபியின் ஆதரவைப் பெற்ற ஒரு சுயேச்சைக் குழுவை தாம் ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கொண்டிருந்தது. இதனால் தவிசாளர் பதவி கூட்டமைப்பிடம் சென்றது.

அண்மையில் அப்பிரதேச சபையின் தவிசாளர் இறந்து போன காரணத்தால் அப்பதவி வெற்றிடம் ஆகியது. அதன் பின் நடந்த வாக்கெடுப்பில் சுயேட்சைக் குழு வெற்றி பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தபடியால் அந்த வெற்றி கிடைத்தது. எனினும் அதன் பின் வந்த பட்ஜெட் வாக்கெடுப்பில் சுயேச்சைக் குழுவின் தவிசாளர் தோற்கடிக்கப்பட்டார். கூட்டமைப்பு, யு.என்.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து அவரை தோற்கடித்தன.

இது தொடர்பில் சுயேச்சைக்குழுவை ஸ்தாபகர்களில் ஒருவர் இக்கட்டுரை ஆசிரியரோடு தொடர்பு கொண்டார். தமிழ்தேசிய திரட்சியை சமூகங்களின் பெயரால் உடைப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் இதுவிடயத்தில் எம்மை ஏன் ஆதரிக்கவில்லை என்றும் கேட்டார். குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள்



முன்னணி இதில் எதிர்நிலை எடுப்பது குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். எனவே நான் தமிழ் தேசிய மக்கள் முன்னனியுடன் உரையாடினேன். கொள்கை ரீதியாக தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையையும் உள்ளடக்கியது தான் என்ற அடிப்படையில் இந்த விவகாரம் அணுகப்பட வேண்டும் என்பதை அக்கட்சி ஏற்றுக் கொண்டது. இது விடயத்தில் ஈபிடிபி ஆதரிக்கும் ஒரு தரப்பை எதிர்ப்பது என்று முடிவெடுக்காமல் தமிழ் தேசியத் திரட்சியைப் பாதுகாப்பது என்ற நீண்டகால நோக்குநிலையின் அடிப்படையில் அக்கட்சி முடிவெடுத்தது. அதன்படி வாக்கெடுப்பில் சுயேச்சை குழுவை எதிர்ப்பதில்லை என்று முடிவெடுத்தது.

எனினும் வாக்கெடுப்பு நடந்த அன்று கட்சித் தீர்மானத்தை மீறி அக்கட்சியின் உறுப்பினர் சுயேச்சைக் குழுவுக்கு எதிராக வாக்களித்தார்.தமது கட்சிக் கட்டுப்பாட்டை மீறி முடிவெடுத்த உறுப்பினருக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கிறது. காரைநகர் பிரதேச சபை விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்போடும் தமிழ்தேசியத் திரட்சியை பாதுகாப்பது என்ற அடிப்படையிலும் முடிவுகளை எடுத்திருக்கிறது. எனினும் போதிய அளவுக்கு அரசியல் மயப்படுத்தப்படாத உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கட்சியின் கொள்கை முடிவை மீறி வாக்களித்திருக்கிறார். அதே சமயம் அவரைப் போலவே அப்பிரதேசத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கும் விதத்தில் கூட்டமைப்பும் யு.என்.பியும் முடிவுகளை எடுத்தன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். யு.என்.பி ஒரு தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சியல்ல. ஆனால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மத்தியில் இது போன்ற விடயங்களில் தெளிவான விளக்கங்கள் உண்டா? அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் நடந்த சமூக முரண்பாடுகளை கையாள்வதில் தமிழ்தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் துரிதமாக செயல்பட தவறிவிட்டன.

தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையையும் உள்ளடக்கியது தான் என்பதனை எத்தனை கட்சிகள் தமது உறுப்பினர்களுக்கு கற்பித்திருகின்றன? தேசியம் என்றால் என்ன? சமூக விடுதலையும் தேசிய விடுதலையும் ஒன்றா? ஒரு சாதிவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது ?ஒரு மதத் துவேசி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? ஓர் ஆணாதிக்கவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? ஒரு பிரதேசவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? போன்ற கேள்விகளுக்கு கட்சி உறுப்பினர்களுக்கு பொருத்தமான விளக்கங்களை வழங்க வேண்டிய பொறுப்பு எல்லாத் தமிழ் தேசிய கட்சிகளுக்கும் உண்டு.

காரைநகர் பிரதேச சபை விவகாரம் தமிழ்தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளின் உள்ளூர் தலைவர்கள் மத்தியில் சமூக விடுதலை குறித்து போதிய தெளிவு இல்லை என்பதை காட்டுகிறது. அதாவது தேசியவாதத்தை அதன் பிரயோக நிலையில் பல கட்சித் தொண்டர்களும் முக்கியஸ்தர்களும் விளங்கி வைத்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

அது மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிப்பது தொடர்பில் தமிழ் கட்சிகளிடம் பொருத்தமான தரிசனங்கள் போதாது என்பதைத்தான் அண்மை வாரங்களாக உள்ளூராட்சி மன்றங்களில் நடக்கும் வாக்கெடுப்பு முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஒரு புறம் உள்ளூராட்சி மன்றங்களை அவற்றுக்கான உள்ளூர் நிலைமைகளோடு விளங்கிக் கொண்டு பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்குரிய வழிவரைபடத்தை உருவாக்க பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் தவறி விட்டன. இன்னொருபுறம் உள்ளூர் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் மேவி ஒரு தேசியத் திரட்சியை கட்டியெழுப்புவதற்கான வழிவரைபடம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உண்டா?

பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்றில் உள்ளூர் சமூக முரண்பாடுகளை ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கின்றன. அல்லது கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை பிரதிபலிக்கின்றன. அல்லது ஒரு கூட்டுக்குள்ளே காணப்படும் உட்கட்சி முரண்பாடுகளை பிரதிபலிக்கின்றன. இதனால் கட்சிகளால் உள்ளூராட்சி மன்றங்களில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. அதேசமயம் அதைவிட முக்கியமாக தேசியத் திரட்சியையும் பாதுகாக்க முடியவில்லை. இது அதன் இறுதி விளைவாக சில சபைகளில் எதிர்த்தரப்பிடம் அதிகாரத்தை கொடுப்பதில் தான் முடிவடைந்திருக்கிறது.

மாகாணசபை தேர்தல் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலை போலன்றி பிரதேச சபைகளுக்கான தேர்தல் எனப்படுவது உள்ளூர் யதார்த்தங்களை உள்ளூர் உணர்வுகளை அபிமானங்களை ஏற்றத் தாழ்வுகளை பிரதிபலிப்பது. எனவே அங்கே பிரதிநிதிகளை தெரிவு செய்யும் பொழுது பிரதேச உணர்வுகளும் அப்பிரதேசத்தில் காணப்படும் சமூக வேறுபாடுகளும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் இனமத முரண்பாடுகளும் தீர்மானிக்கும் காரணிகளாக இருக்கும். இது விடயத்தில் தீர்க்கதரிசனம் மிக்க தந்திரோபாயமான அணுகுமுறைகள் தேவை. எத்தனை தமிழ் கட்சிகளிடம் அவ்வாறான அணுகு முறைகள் இருந்தன? இருக்கின்றன?

சமூக ஏற்றத்தாழ்வுகளை, மத முரண்பாடுகளை மட்டுமல்ல பால் அசமத்துவத்தையும் தமிழ்தேசிய நோக்கு நிலையிலிருந்து அணுகுவதில் எத்தனை கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன? கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் நடந்த கூட்டத்தில் மேடையிலும் பெண்கள் இருக்கவில்லை, பார்வையாளர்கள் மத்தியிலும் பெண்கள் இருக்கவில்லை.

பால் சமத்துவத்தைப் பேணும் விதத்தில் பெண் வேட்பாளர்களை தெரிவு செய்யும் விடயத்திலும் பெரும்பாலான கட்சிகளிடம் நீண்டகால நோக்கிலான தயாரிப்புக்கள் இருக்கவில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பிட்ட விகிதம் பால் சமநிலை பேணப்பட வேண்டும் என்ற ஒரு சட்டரீதியான நிர்ப்பந்தம் ஏற்பட்ட பொழுது பெண் வேட்பாளர்களை தேடி எல்லாக் கட்சிகளும் ஊர் ஊராக திரிந்தன. ஏற்கனவே ஆண் வேட்பாளர்களுக்கு தட்டுப்பாடு. இந்நிலையில் பெண் வேட்பாளர்களை எங்கே கண்டு பிடிப்பது? இதனால் ஆட்பொலிவுக்கு பெண்களை தேடி கண்டு பிடித்து தேர்தலில் நிறுத்தினார்கள். அவர்களில் அனேகர் படிப்படியாக செதுக்கப்பட்ட உள்ளூர் தலைமைகள் அல்ல.

பெண் வேட்பாளர்கள் மட்டுமல்ல ஆண் வேட்பாளர்களின் நிலைமையும் அப்படித்தான். கிராம மட்ட உள்ளூர் தலைமைகளைச் செதுக்கி எடுப்பதற்குரிய பொருத்தமான அரசியல் தரிசனங்களும் பொறிமுறைகளும் எத்தனை கட்சிகளிடம் உண்டு?

கிராம மட்ட தலைமைத்துவம் தான் அடுத்தடுத்த கட்டங்களில் நகரத்துக்கும் மாவட்டத்துக்கும் மாகாண மட்டத்திற்கு அதற்கடுத்த மட்டங்களுக்கும் (20ம் பக்கம் பார்க்க)

கோழி இறைச்சி - ஆட்டிறைச்சி
உங்கள் வீட்டுக்கே விநியோகம்!





உங்கள் குடும்பத்தின் தேவைக்கேற்ற அளவில் உங்கள் வீட்டு வாசல் வரை விநியோகம் செய்கின்றோம். அத்துடன் குடும்பத்தினர் சமைக்கக் கூடிய முறையில் சிறுசிறு துண்டுகளாக துப்பரவாக வெட்டியும் தருகின்றோம்.

வாரத்தில் வெள்ளி - சனி - ஞாயிறு தினங்களில் மட்டுமே சேவை.

ஒரு முறை வாங்கிச் சமைத்துப் பாருங்கள்!

தொடர்புகளுக்கு:- சானு 416 456 3051 ஸ்ரீ 647 328 8880

# சீனா - ஈழத் தமிழர் உறவை எவ்வாறு கையாள்வது?

கட்டுரையாளர்:
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்





ஈழத்தமிழரின் அரசியல் பரப்பில் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கியூ சென் ஹொங்கின் வடக்கு விஜயம் அதிக முக்கியத்துவத்தை தந்தமையை கடந்த வாரம் அறிந்தோம். இதைத் தொடர்ந்து ஈழத்தமிழர் — சீன உறவு பற்றிய உரையாடல் பொது வெளியிலும் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சீனாவை எதிர்க்க முனைகின்ற போக்கையும் அதன் தலைமை தந்திரோபாயமாக சீனா விடயத்தை கையாளும் உரையாடலை வெளியிட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது. இத்தகைய சூழலில் சீனாவை தமிழ் தரப்பு எப்படி கையாளுவது சாதகமாக அமையும் என்பதை தேடுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சீனத் தூதுவரின் வடக்கு விஜயத்தைப் பற்றி குறிப்பிடும் போது இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும் நீதியின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையில் வாழவேண்டும் என்பது குறித்து சீனத் தரப்பினர் எதனையும் கூறவில்லை. வடக்கு மாகாணத்துக்குப் பயணம் செய்த சீனத் தூதுவரும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்க வில்லை எனத் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சீனத் தூதுவரின் வடக்கு விஜயம் தொடர்பில் வெளிபடுத்திய போது சீனர்களின் செல்வாக்கை வடக்கு கிழக்கில் தாம் விரும்பவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். இதே கருத்தையு அநேக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளிப்படுத்த முயலுகின்றனர். அவ்வாறே தமிழ் பரப்பிலும் இந்தியப் பரப்பிலும் உள்ள ஆய்வாளர்கள் உரையாட முனைகின்றனர்.

இத்தகைய உரையாடலுக்குள் தமிழ் தரப்பானது சீனாவை எப்படி அணுகுவதென்பது பிரதான கேள்வியாகும். முதலாவது சீனா உலக வல்லரசாக எழுச்சியடைந்து வருகிறது. அரசியலிலும் பொருளாதார, இராணுவக் கட்டமைப்பிலும் வலுவான அரசாக விளங்குவதுடன் சந்தை அமைப்பை முதன்மைப்படுத்திக் கொண்டு வர்த்தக ரீதியில் உலகப் பொருளாதாரத்தை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்துள்ளது.

ஏறக்குறைய அமெரிக்க ஐரோப்பிய அணிக்கு நிகராக அரசியல், பொருளாதார, இராணுவ வளர்ச்சியை சீனா எட்டியுள்ளது. சீனா முதல் வல்லரசாகும் எழுச்சியை அமெரிக்க ஐரோப்பா இந்தியக் கூட்டு தடுத்தாலும் அடுத்து வரும் தசாப்தங்களில் சீனா மேற்குலகக் கூட்டுக்கு சமதையான அரசாக விளங்கும். அத்தகைய உலக ஒழுங்கானது இரு துருவ அரசியலாக அமையவோ அல்லது பல துருவ உலக ஒழுங்காகவோ அமைய வாய்ப்புள்ளது. இதில் சீனா ஒரு தரப்பாக விளங்கும் என்பதை வரலாற்றில் தவிர்க்க முடியாது. அவ்வாறின்றி சீனா தனி வல்லரசாக எழுச்சியடையுமாக இருந்தால் அதற்குள் ஈழத்தமிழர்கள் இயங்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அதேநேரம் சீனா ஈழத் தமிழருக்கான சுயநிர்ணய உரிமையையோ மனித உரிமையையோ ஜனநாயகத் தன்மை பொருந்திய அரசியல் கட்டமைப்பையோ அல்லது இவை அனைத்தும் ஒன்று திரண்ட ஓர் அரசியல் தீர்வைப் பற்றிய முடிவைத் தரப்போகும் தேசமாக இதுவரை அது காட்டிக் கொள்ளவில்லை. காரணம் அது ஓர் அரசின் இறைமையை (State Sovereignty) கொண்ட ஆட்சியைப் பின்பற்றி வருகிறநாடு.

ஏறக்குறைய 15ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய அரசுகளின் இறைமைக் கோட்பாட்டை பின்பற்றும் அரசாக சீனா விளங்குகிறது. அதன் பொருளாதார இலக்குக்குள் சந்தையும் வர்த்தகமும் அடிப்படையானது. சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் மூலாதாரமாக பொருளாதாரமே காணப்படுகிறது.

சீனா அரசுகளின் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் உள்நாட்டு விடயங்களில் தலையிடாத போக்கை கடைப்பிடித்து வருகிறது. மார்க்சிஷமோ அல்லது சோசலிஷமோ குறிப்பிடும் தேசிய இனங்கள் மீதான ஒடுக்கு முறையை எதிரான எந்த அணுகுமுறையையும் சீனா வெளிப்படுத்தாதது மட்டுமல்ல ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு ஆதரவான செயல்பாட்டை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

அதற்காக ஏனைய வல்லரசுநாடுகள் தேசிய இனங்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக முழுமையான ஆதரவை வெளிப்படுதியுள்ளன என்று பொருள் கொள்ள முடியாது. ஆனால் சீனாவுடன் ஒப்பிடும் அளவுக்கு இந்தியாவும் மேற்குலகமும் தனது நலனுக்கு உகந்த வகைக்குள் தேசிய இனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளன. அது மட்டுமின்றி மனித உரிமைகள் ஜனநாயகம் போன்ற அரசியல் வெளிகளை கொண்ட தேசங்களாகவும் அவை காணப்படுகின்றன.

இரண்டாவது இந்தியா புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் சம காலத்தில் கொண்டுள்ள நாடாக விளங்குகிறது. இந்து சமுத்திரத்தில் நிலையான இருப்பைக் கொள்வது மட்டுமன்றி அமெரிக்க ஐரோப்பிய அணியுடனான நெருக்கத்தையும் இந்தோ பசுபிக் உபாயத்தின் பிராதன நாடுகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது. ஆனால் ஈழத்தமிழரின் அரசியலில் அதிக பாதிப்புகளை மேற்கொண்ட தேசமாகவும் முள்ளிவாய்க்கால் துயரத்தை பக்கபலமாக நின்று செயல்படுத்திய நாடாகவும் கருதப்படுகிறது. அதே நேரத்தில் ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டம் இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டது என்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது. பரஸ்பரம் இரு தரப்பும் இத்தகைய விவாதத்தில் அதிக இழப்புக்களை எதிர் கொண்டு வருகிறது. ஆனால் இவை அனைத்தும் அரசியலில் வரலாறுகளே. இத்தகைய வரலாற்றிலிருந்து அனுபவங்களை ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். காரணம் ஈழத்தமிழர்களும் இலங்கைத் தீவும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானவையே. ஈழத்தமிழர் இருப்பு என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமானதே. தென்னிலங்கை இந்தியாவுக்கு எதிரானதாகவே எப்போதும் செயல்பட்டு வருகிறது. அவ்வப்போது இந்தியாவுடன் நெருக்கம் எனக் காட்டிக் கொண்டாலும் அடிப்படையில் முரண்பாடான உறவையே கொண்டுள்ளது. அந்த வகையில் தென்னிலங்கையின் அணுகுமுறை ஒன்றும் தவறானதல்ல. அது தனது இருப்பையும் தேசத்தையும் பாதுகாக்கும் கொள்கையில் இயங்குகிறது.

மூன்றாவது மேற்குலக சூழலும் இந்து சமுத்திரப் பிராந்திய நிலையும் சீனாவுக்கு எதிரான திட்டமிட்ட அணுகுமுறையைக் கொண்டுள்ளன. இலங்கைத்தீவிலிருந்து சீனாவை அகற்றுதல் என்பது மேற்கு உட்பட்ட இந்தியாவின் அணுகுமுறையாக உள்ளது. அதற்கான கட்டமைப்புகளையும் கூட்டுப்பாது காப்பு வழிமுறைகளையும் இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளுடன் ஏற்படுத்தி வருகிறன. குவாட் — ஒன்று இரண்டு (GUAD-I,II) மற்றும் ஆக்குஷ் (AUKUS) உடன்படிக்கை என்பவை மட்டுமின்றி தற்போது ஐரோப்பிய ஒன்றியம் கட்டமைத்துள்ள உலகளாவிய நுழைவாயில் (GLOBAL GATEWAY) சீனாவுக்கு எதிரானவையே. இரண்டாம் உலக போருக்கும் போருக்குப் பிந்திய உலக ஒழுங்கை மேற்குலகம் கூட்டுப் பாதுகாப்பினூடாகவே மேற்கொண்டு வெற்றி கண்டது. சோவியத் யூனியனின் தோல்வி அத்தகைய மேற்குலகத்தின் கூட்டுப் பாதுகாப்பிலேயே நிறைவேறியது. சீனாவும் ரஷ்யாவும் மேற்குலக கூட்டுப் போன்றதல்ல. இந்தியாவுடனான ரஷ்யாவின் உறவு சீனாவைவிடப் பலமானது. எனவே மேற்கின் கூட்டுடன் ஒப்பிட முடியாது சீன ரஷ்யக் கூட்டை.

நான்கு ஈழத்தமிழ் தலைமைகளின் அரசியல் தீர்மானங்கள் சீனாவை பூகோள அரசு என்ற அடிப்படையில் அணுகக் கூடியதான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது. புவிசார் அரசாக இந்தியாவையும் பூகோள அரசுகளில் ஒன்றாக சீனாவையும் ஈழத் தமிழர் நோக்குவது பொருத்தமான நடைமுறையாகும். சீனாவை முற்றாக எதிர்ப்பதை விடுத்து அதன் அணுகுமுறையில் ஈழத்தமிழர் தமது நியாயமான கோரிக்கைக்கு இசைவுபடுத்த முயற்சிப்பது அவசியமானது.

கடந்த காலத்தில் அந்நாடு ஈழத்தமிழருக்கு எதிராக தென்னிலங்கையுடன் இணைந்து மறைமுகமாக இழைத்த துயரத்தை கைவிட்டு விட்டு சம காலத்தில் ஈழத்தமிழரின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வைக்க முயலுதல் பொருத்தமானதே. அத்தகைய முயற்சி சாத்தியமாகிறதா இல்லையா என்பது முக்கியமல்ல. அத்தகைய வெளியை திறப்பது அவசியமானது. அது ஓர் அரசியல் உரையாடல் மட்டுமே. அதற்காக இந்தியாவுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்றோ அல்லது சீனாவிடம் சரணடைய வேண்டும் என்றோ பொருள்கொள்ள வேண்டியதில்லை. எப்படி சீனாவின் கால்களில் நின்று கொண்டு தென்னிலங்கை இந்தியாவை நகர்த்துகிறதோ அதேபோன்று இந்தியாவின் அருகில் நின்று கொண்டு சீனாவை நகர்த்துவதே ஈழத்தமிழருக்கான வழிமுறையாகும்.

எனவே ஈழத்தமிழர் சீனா பொறுத்து அச்சமோ அதிருப்தியோ கொள்ள வேண்டியதில்லை. சீனா ஒரு பூகோள அரசு. இந்தியா புவிசார் அரசாகவும் பூகோள அரசாகவும் உள்ளது. அமெ

ரிக்கா ஐரோப்பா பூகோள அரசுகளாகவே நோக்கப்பட வேண்டும். இந்தியாவுக்கு ஊடாகவே ஈழத்தமிழர் பூகோள அரசுகளை அணுகுவது ஆரோக்கியமான அரசியலாக அமையும். 1962 இல் தந்தை செல்வா சீன இந்திய போர் நிகழ்ந்து கொண்டிருந்த போது இந்தியாவுக்கு ஆதரவாக ஈழத்தமிழ் இளைஞர்ளை திரட்டி போருக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார் என்று தெரிய வருகிறது. அப்படியான வரலாற்றிலிருந்து ஈழத்தமிழர்கள் பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.

**எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!**
**ஈழத்து -இந்தியக் கலைஞர்களோடு**
**ஈழநாடு 29வது ஆண்டு விழா**
**சங்கீத சங்கமம் 2022**
**16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை**

# இறைமை மீறப்படுகிறதா?

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



அண்மைக்கால அரசியல் நகர்வுகள் சில அரசாங்கத்தைப் பதற்றமடையச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

சுமந்திரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்று அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டு நடத்தப்பட்டிருக்கின்ற பேச்சுகளும் இந்தியாவின் தலையீட்டைக் கோரி தமிழ் பேசும் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்பத் தயாராகி வருகின்ற சூழலும் தான், அரசாங்கத்தை பதற்றமடையச் செய்திருக்கிறது.

சுமந்திரன் தலைமையிலான குழுவினர், அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டு பேச்சுக்கள் நடத்தப்பட்டதைடுத்தடுத்து சில நாட்களிலேயே மஹிந்த சமரசிங்கவை அமெரிக்கா வுக்கான தூதுவராக நியமித்து வொஷிங்டனுக்கு அனுப்பி வைத்திருக்கிறது அரசாங்கம்.

மஹிந்த சமரசிங்க முன்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் மனித உரிமைகள் அமைச்சராகப் பதவி வகித்தவர். போர்க்காலத்திலும் அதற்குப் பின்னரும் சர்வதேச அளவில் இலங்கைக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்ட போது அதனைத் தணிப்பதற்கான முயற்சிகளில் பங்கெடுத்தவர்.

அவரை அவசரமாக அமெரிக்காவுக்கு அனுப்பிய அரசாங்கம் சுமந்திரன் தரப்பு யார் யாரையெல்லாம் சந்தித்துப் பேசியதோ அவர்களைச் சந்தித்துப் பேச உத்தரவிட்டிருக்கிறது.

அவரும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர் பேச்சுக்களை நடத்துகிறார். அண்மையில் அவர் அமெரிக்காவின் பூகோள குற்றவியல் பணியகத்தின் தலைவரான மைக்கல் கொசாக்கை சந்தித்து இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகள் குறித்து விளக்கமளித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சு கூறியிருக்கிறது. இலங்கையின் தற்போதைய அரசாங்கம் நல்லிணக்க முயற்சிகளையோ பொறுப்புக்கூறல் நகர்வுகளையோ அல்லது தமிழர் தரப்புடன் அரசியல் பேச்சுக்களையோ கூட முன்னெடுக்கவில்லை.

ஆனால் சர்வதேச தலையீடுகள் வந்து விடுமோ என்ற அச்சம் அதற்கு ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கின்ற வெளிவிவகார அமைச்சர், ஜி.எல்.பீரிஸ் இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு. இறையாண்மையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் வெளிநாடுகளுக்கு இல்லை. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கும் என இரா.சம்பந்தன் கனவு காணக்கூடாது. சீனா மாத்திரமல்ல எந்த நாடும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காது என்று கூறியிருந்தார்.

இலங்கை அரசாங்கமே அரசியல் தீர்வை வழங்க தயாராக இருக்கிறது கூட்டமைப்பினர் எங்களுடன் பேச முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இதுவரை தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி தமிழ்மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவில்லை.

கூட்டமைப்புடன் விரைவில் ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று கூறிக் கூறியே ஆண்டுக்கணக்காக காலம் கடத்தப்படுகிறது. அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப்புக்காக மட்டும் இந்த இழுத்தடிப்பு இல்லை.

அடுத்த வாரம் நடக்கும் என்றும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் பேசுவார் என்றும் இதே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பல முறை கூறி விட்டார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கே தயாரில்லாத அரசாங்கம் தான் அவர்களுக்குத் தீர்வு வழங்குவதாக கூறுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்து ஒன்றரை மாதத்துக்குள் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாக்குறுதி அளித்தும் 9 மாதங்களாகி விட்டன.



அவர்களை ஜனாதிபதி சந்திக்க விரும்புவதாகவும் ஏற்பாடு செய்வதாகவும் கூறிக் கூறியே காலம் கடத்தப்படுகிறது. தமிழர் பிரச்சினை விடயத்தில் அரசாங்கம் எல்லா விடயங்களிலுமே இவ்வாறு தான் நடந்து கொள்கிறது.

ஏன் தற்போது நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினைகளையே தீர்க்க முடியாமல் திணறுகின்ற அரசாங்கம் தன்னிடமே தமிழர் பிரச்சினைக்கான தீர்வு உள்ளதாக கூறுவது தான் வேடிக்கை. எவ்வாறாயினும் தீர்வு வெளிநாடுகளிடம் இல்லை எங்களிடம் தான் உள்ளது என்று அரசாங்கம் வலியுறுத்த முனைவது ஒருவித பயத்தின் வெளிப்பாடு தான். பிரச்சினை ஒன்று உள்ளது என்பதையும் அது தீர்க்கப்பட வேண்டியது என்பதையும், அந்த தீர்வை வழங்கும் பொறுப்பில் இலங்கை அரசு உள்ளது என்பதையும் அமைச்சர் பீரிஸின் கருத்து ஏற்றுக் கொள்வதாக இருக்கிறது.

அதேவேளை வெளிவிவகார அமைச்சர் பீரிஸூம் சரி ஊடகத்துறை அமைச்சர் டலஸ்அழகப்பெருமவும் சரி இலங்கை இறையாண்மை கொண்ட நாடு என்றும் வேறு நாடுகள் தலையிட முடியாது என்றும் வலியுறுத்துவதும் கூட ஒருவித பயத்தின் வெளிப்பாடு தான். இலங்கையின் இறையாண்மை கேள்விக்குட்படுத்த முடியாத ஒன்று. ஆனால் இலங்கைக்கு மட்டும் தான் இறைமை உள்ளது என்றில்லை.

தமிழ்த்தேசிய இனத்துக்கும் இறைமை உள்ளது. இறைமை மக்களிடம் உள்ளதாக இரா. சம்பந்தன் அடிக்கடி கூறுவதுண்டு. தமிழ் மக்களின் இறைமையை மதிக்கும் போது தான், இலங்கையின் இறைமை பாதுகாக்கப்படும். தமிழ் மக்களின் இறைமையை அரசாங்கம் நிராகரித்தால் அதனை ஏற்க மறுத்தால் இலங்கையின் இறைமையை மீறி பல நாடுகள் தலையிடுகின்ற நிலை ஏற்படலாம். இறைமையுள்ள நாடுகளின் விவகாரங்களில் பிற நாடுகள் தலையிட முடியாது என்பது பொய் வாதம்.

தாய்வான் ஒரு இறைமையுள்ள நாடு. ஆனால் சீனா அதற்கு உரிமை கோருகிறது. அதன் இறைமையில் தலையீடு செய்ய முனைகிறது. அதற்கு இலங்கையும் கூட ஆதரவு வழங்குகிறது. இலங்கையின் இன்னொரு கூட்டாளியான ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரேனின் இறைமையை மீறித் தான், அதன் ஒரு பகுதி யான கிரீமியாவை ஆக்கிரமித்தது. இப்போது உக்ரேன் மீது படையெடுப்பதற்கும் தயாராகி வருகிறது.

இலங்கைக்கு ரஷ்யாவும் உக்ரேனும் நட்பு நாடுகள். இங்கு ஒன்றின் மீதான இறைமை இன்னொன்றினால் மீறப்படுகின்ற போது கொழும்பு அமைதியாகத் தான் இருக்கிறது. ஈராக்கின் இறைமையை மீறித் தான் அமெரிக்காவும் நேசநாடுகளும் படையெடுத்தன.

லிபியாவிலும் ஆப்கானிஸ்தானிலும், வேறு பல நாடுகளிலும் இறையாண்மையை மீறிய வெளிநாட்டுத் தலையீடுகள் நிகழ்ந்தமை வரலாறு.

ஒவ்வொரு தலையீட்டுக்கும் ஒவ்வொரு காரணம் இருந்தது. ஒவ்வொரு காரணம் சொல்லப்பட்டது. ஏன் இலங்கையின் இறைமையை மீறித் தான் 1987இல் இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தின் மீது உணவுப் பொதிகளைப் போட்டன.


ஆக சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும், அரசுகளின் செயற்பாடுகளும் தான் ஒரு நாட்டின் இறைமையைப் பாதுகாக்கிறது. ஒரு நாட்டின் இறையாண்மையை மீறு கின்ற போது அதற்கான சூழல் தானாக உருவாகிறது. சில வேளைகளில் உருவாக்கப்படுகிறது. அவ்வாறான வாய்ப்புகளை தவிர்த்து நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது தான், ஒரு அரசின் பொறுப்பு.

வெளிநாடுகளின் வெளிப்படையான படையெடுப்புகளாகட்டும் இறையாண்மையை மீறிய தலையீடுகளாகட்டும் அந்த நாடுகளின் நலன்களுக்கானவையாக மாத்திரம் இருப்பதில்லை. அந்தந்த நாடுகளின் நடத்தைகளும் செயற்பாடுகளும் கூட அதற்கு வாய்ப்பாகிப் போகின்றன.


இலங்கை தனது இறையாண்மை மீது நம்பிக்கை வைத்திருப்பது தவறில்லை. ஆனால் அந்த இறையாண்மைக்கு பாதிப்பு வந்து விடாதபடி வெளிநாடுகளின் தலையீடுகள் ஏற்பட்டு விடாதபடி பாதுகாக்க வேண்டுமானால், பிரச்சினைகளுக்கான தீர்வை முதலில் காண வேண்டும்.

பிரச்சினைகள் இல்லாத இடங்களில் பிரச்சினைகளை உருவாக்கி தலையீடு செய்வது கடினமானது. பிரச்சினைகள் கொளுந்து விட்டு எரியும் நாட்டில் அவ்வாறான தலையீடுகளை செய்வது சுலபம். இலங்கையில் தலையீடு செய்வதற்கு வெளிநாடுகள், முயற்சிக்கின்ற போது அதிலிருந்து நாட்டைக் காக்கும் பொறுப்பிலுள்ள ஒரு அரசாங்கம் வெட்டிப் பேச்சுக்களில் காலத்தை கடத்தாது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தான் கவனம் செலுத்தும். ஆனால் இலங்கையில் அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை.


சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



## PANDIT: KRISHNAM RAJU

**Solutions & Suggestions on:**

| | |
|---|---|
| Black Magic | Education, Family |
| Evil Spirits | Employment, Court |
| Jealousy | Husband & Wife |
| Health, Wealth | Children Problem |
| Business, Marriage | Business Prob. |
| Drinking Problem | Vasthu Prob |
| Love, Divorce | Real Estate |
| Visa Prob. | and all other Problems |

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஷ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

**An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection**

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

**437-213-3305**

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

# கியூபா சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும், வேறு மாவட்டங்களுக்கும், வேறு நகரங்களிற்கும்.

2022 தை மாதம் முதல் 2022 ஆனி வரை

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு இந்த விலை.



| 3 STAR ★★★ | 3½ STAR | 4 STAR ★★★★ | 4½ STAR | 5 STAR ★★★★★ |
|---|---|---|---|---|
| REGUALR C$1,000 | REGUALR C$1,250.00 | REGUALR C$1,500.00 | REGUALR C$,750.00 | REGUALR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$1,750.00 |

கீழ்காணும் அனைத்திற்கும் விமானச்சீட்டு, தங்குமிடவசதி, விமான நிலையத்திற்கும், தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு (3 நேர உணவு) மதுபானம், குளிர்பானம், சுடுபானம்.

முன்பதிவும், முற்பணமும் 3 மாதத்திற்கு முன்பு அவசியம். HST இலக்கத்துடன் பற்றுச்சீட்டு உடன் வழங்கப்படும்.

25 Crouse Road, Unit 4078,
Toronto Ontario, M1R 5P8

மேலதிக விபரங்களுக்கு : Owner & Operator
திரு. ராதா பிரான்சிஸ்சேவியர்

E-mail : a1actour.com@gmail.com
Web : www.a1actour.com
F: Facebook.com / Allccountriestour

**416 644 7273 416 857 5252**

# பிரபஞ்ச மர்மங்களைத் துலங்கும் பாரிய அதி நவீன தொலைக்காட்டி விண்வெளி நோக்கிப் புறப்பட்டது!



இந்தப் பூமிக்கு நாம் எங்கிருந்து வந்தோம்? பிரபஞ்சத்தில் மனிதன் தனியே பூமியில் மட்டுமா வாழ்கிறான்? இவை போன்ற பல முக்கிய கேள்விகளுக்கு விடை கண்டு பிடிப்பதற்கான மனித குலத்தின் இடை விடா அறிவியல் முயற்சிகளில் மற்றொரு சாதனை மின் தொடக்க நாளாக இன்றைய(25 டிசம்பர் 2021) நத்தார் தினம் அமைந்து விட்டது.

ஜேம்ஸ் வெப் (James Webb) எனப் பெயரிடப்பட்ட விண்வெளி ஆராய்ச்சித் தொலைக்காட்டி (Space Telelescope ) பிரெஞ்சு கயானாவில் (French Guiana) உள்ள விண்வெளிப் பயணத் தளத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

ஏரியன் — 5 (Ariane 5) என்ற விண்வெளி ரொக்கெட் அந்தப் பாரிய தொலைக்காட்டியைச் சுமந்தவாறு பிரெஞ்சு நேரப்படி இன்று மதியம் 13.20 மணிக்கு விண்வெளிக்குப் புறப்பட்டது. பல முறை ஒத்தி வைக்கப்பட்டு வந்த இந்தப் பயணம் உலகெங்கும் உள்ள அறிவியலாளர்களது தீவிர எதிர்பார்ப்பாக இருந்து வந்தது. அது இன்று நிறைவேறியிருக்கிறது.

ஜேம்ஸ் வெப் தொலைக்காட்டியைத் தாங்கிய விண் கலம் சுமார் ஒரு மாதம் பயணித்து பூமியில் இருந்து 1.5மில்லியன் கிலோ மீற்றர்கள் தூரத்தில் சூரிய சுற்று வட்டப்பாதையில் (solar orbit) தனது அவதானிப்பு நிலையைச் சென்றடையும் என்று கூறப்படுகிறது.

அடுத்த ஆறு மாதங்களில் அது தொழிற்படத் தொடங்கும். நாசா அறிவியலாளர்களுடன் ஐரோப்பா மற்றும் கனடா விண்வெளி ஆராய்ச்சி நிலையங்களது (European and Canadian space agencies) அறிவியலாளர்களும் இணைந்து சுமார் முப்பது ஆண்டுகள் முயற்சி செய்து இந்தப் பாரிய — அதி நவீன தொலைக்காட்டியைத் தயாரித்துள்ளனர்.

அதன் மொத்த செலவு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். பிரான்ஸின் துலூசில் இயங்கும் விண்வெளி ஆய்வு மையம் தொலைக்காட்டியின் தொழில் நுட்பத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கை வகித்துள்ளது.

மனிதன் முதல் முதலில் சந்திரனில் கால் பதித்த காலப்பகுதியில் நாசா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக விளங்கிய ஜேம்ஸ் வெப் (James Edwin Webb) அவர்களுடைய பெயரே இந்த ராட்சதத் தொலைக்காட்டிக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

1990 இல் விண் வெளிக்குச் செலுத்தப்பட்ட முதல் நவீன தொலைக்காட்டியான ஹப்பிள் தொலைக்காட்டியின் (Hubble telescope) இடத்தைத் தொடர்ந்து அதை விட அளவில் மிகப் பெரியதும் ஆகப்பிந்திய தொழில் நுட்பங்களைக் கொண்டதுமான ஒரு விண்வெளி ஆய்வுக் கருவியாக ஜேம்ஸ் வெப் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சூரியன் மற்றும் கோள்கள் பூமி என்பனவற்றை உள்ளடக்கிய பிரபஞ்சம் (Universe) எவ்வாறு தோன்றியிருக்கும் (birth of the Universe) என்று பல புனைகதைகளும் சினிமாப் படங்களும் சித்திரக்கதைகளும் சொல்லி வந்த புதிர்களை அவிழ்க்கின்ற நேரடியான ஆய்வுகளில் மனிதன் இறங்குவதை ஜேம்ஸ் வெப் தொலைக்காட்டியின் (James Webb telescope) இன்றைய பயணம் உலகிற்கு உணர்த்துகிறது.

பிரபஞ்சத்தில் முதல் நட்சத்திரக் கூட்டங்களின் (first galaxies) உருவாக்கம் எவ்வாறு நேர்ந்தது, கோள்கள் மற்றும் பிரபஞ்சத்தில் தொலைவில் உள்ள பொருள்களில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவான வளிமண்டலவியல் குணாதிசயங்கள் உள்ளனவா என்பன போன்றஅறிவியல் விவரங்களைத் தொலைக்காட்டி தன் பார்வைக்குள் எடுத்து அது பற்றிய படங்களை, தகவல்களைப் பூமிக்கு அனுப்பும் எனக் கூறப்படுகிறது.

பிரதானமாக அதன் கருவிகள் பிரபஞ்சஒளி அலைகளது நீளங்களை உடைத்துஅவற்றின் உயிரியல் மற்றும் இரசாயனக் கூறுகளைத் (physical and chemical components) தீர்மானிக்கும் வேலையைச் செய்யவல்லன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதன் பயணமும் தொழிற்பாடுகளும் வெற்றிகரமாக நிறைவேறுமானால் பிரபஞ்சத்தில் பூமியைத் தவிர வேறு கிரகங்களில் மனித உயிர்கள் வாழ்ந்திருப்பதற்கான சாத்தியங்கள் பற்றியும் பூமிக்கு மனிதர்கள் எவ்வாறு வந்திருக்க முடியும் என்ற மர்மங்கள் குறித்தும் சில விடைகளை அறிவதற்கு ஜேம்ஸ் வெப்தொலைக் காட்டி உதவும் என்று அறிவியல் உலகம் நம்புகிறது.

பாரிஸில் இருந்து குமாரதாஸன்


# தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு மறைவு



தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவியவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ்மண்ட் டுட்டு தனது 90 ஆவது வயதில் காலமானார். இது குறித்து தனது இரங்கல் செய்தியில் ஜனாதிபதி சிரில் ரமபோசா சிறந்த தென்னாபிரிக்கர்களின் தலைமுறைக்கு நமது நாட்டின் பிரியாவிடையின் மற்றொரு அத்தியாயத்தை குறிக்கிறது என்று கூறினார். டுட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த நபர்களில் ஒருவர்.

நிறவெறி எதிர்ப்பு தலைவரான நெல்சன் மண்டேலாவின் சமகாலத்தவர், தென்னாபிரிக்காவில் 1948 முதல் 1991 வரை கருப்பின பெரும்பான்மையினருக்கு எதிராக வெள்ளை சிறுபான்மை அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்ட இனப் பிரிவினை மற்றும் பாகுபாடு கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இயக்கத்தின் உந்து சக்திகளில் ஒருவராக இருந்தார். நிறவெறி முறையை ஒழிப்பதற்கான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்கிற்காக 1984 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# மண்டேலா சிறைச்சாவி ஏலம்! தென் ஆபிரிக்க அரசு கண்டனம்



தென் ஆப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த ராபன் தீவு சிறையின் சாவியை அமெரிக்க நிறுவனம் ஏலம் விடுவதற்கு அந்த நாட்டு அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து தென் ஆப்பிரிக்க கலை மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் நதிம்தெத்வா கூறியதாவது

நெல்சன் மண்டேலா 14 ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்த ராபன் தீவு சிறையின் சாவியை அமெரிக்காவைச் சேர்ந்த கியூர்ன்சேஸ் ஆக்ஷன்ஸ் நிறுவனம் வரும் ஜனவரி 28ஆம் தேதி ஏலத்துக்கு விடுவது கண்டனத்துக்குரியது.

தென் ஆப்பிரிக்காவின் வலி மிகுந்த வரலாறு, அதன் நினைவுச் சின்னங்கள் அனைத்தும் தென் ஆப்பிரிக்காவுக்குச் சொந்தமானவை. எங்களுடன் கலந்தாலோசிக்காமல் எங்களின் நினைவுச் சின்னமான ராபன் தீவு சிறைச் சாவி ஏலத்துக்கு விடப்படக்கூடாது. எனவே அந்த ஏலத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மேலும் அந்தச் சிறையின் உண்மையான சாவி எங்களிடம் உள்ளதால் ஏலத்தில் விடப்படுவது போலியாக இருக்குமா என்பது குறித்தும் விசாரித்து வருகிறோம் என்றார் அவர்.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிறவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா, அதற்காக 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதில் 18 ஆண்டுகளை ராபன் தீவிலுள்ள சிறையில் அவர் கழித்தார் பின்னர் நிறவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டின் முதல் கருப்பினர் அதிபராக அவர் கடந்த 1994ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். தற்போது ராபன் தீவுச் சிறைச்சாலை அருங்காட்சியமாக மாற்றப்பட்டுள்ளது.

# பிரிட்டன் மகாராணியாரைக் கொல்ல முயற்சியா?

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்காக பிரித்தானிய மகாராணியார் வந்திருந்த விண்ட்ஸர் கோட்டைக்குள் ஆயுதம் ஏந்தியபடி ஒரு இளைஞர் நுழைய முற்பட்டார். சனிக்கிழமையன்று காலை 8.30 மணியளவில் பிரித்தானிய மாகாராணியார் இரண்டாம் எலிசபெத் கிறிஸ்துமஸ் பெருவிழாவிற்கு தயாராகிக் கொண்டிருந்த போது இந்த சம்பவம் நடந்துள்ளது.

கையில் குறுக்கு வில் ஏந்தியபடி கோடடைக்குள் ஊடுருவ முயன்ற அந்த 19 வயது இளைஞரை உடனடியாக ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் பிடித்தனர். சம்பவத்தின் போது சந்தேக நபர் கட்டிடத்தின் எந்த பகுதிக்குள்ளும் நுழைய முடியவில்லை என்று தேம்ஸ் பள்ளத்தாக்கு காவல்துறை செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினர். மேலும் அலாரம் அடிக்கப்பட்டதையடுத்து அவர் உடனடியாக கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (20ம் பக்கம் பார்க்க)

# இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13, தமிழர் அரசியல்

(9ம் பக்கத் தொடர்ச்சி) இந்த நிலையில் மாகாண சபை செயலிழந்தது. இந்திய படைகள் இலங்கையில் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்தால் மாகாண சபை செயலழிந்திருக்காது. இந்திய படைகளை நம்பித் தான் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மாகாண சபையை பொறுப்பேற்றிருந்தது.

மாகாண சபை செயலிழந்த பின்னர் மாகாண சபையை பலப்படுத்துவது அதன் அதிகாரங்களை உச்சளவில் பயன்படுத்துவது தொடர்பில் தமிழ் அரசியல் பரப்பில் எவரும் பேசவில்லை. ஏன்? ஏனென்றால் விடுதலைப் புலிகள் தலைமையில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்த போராட்டத்தின் இலக்கு தனிநாடு. தனிநாடு தொடர்பில் சிந்தித்துக் கொண்டிருக்கும் சூழிலில் எவர் மாகாண சபை பற்றி சிந்திக்க முடியும்?

கேக்கின் மீதான கனவினால் கையிலிருந்த ரொட்டியின் அருமை தொடர்பில் எவருக்கும் சிந்திக்க நேரமிருந்திருக்கவில்லை. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை முன் வைத்தும் சர்வதேச அழுத்தங்களை முன் வைத்தும் பலவாறான விவாதங்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் தான் கையிலிருக்கும் ரொட்டியும் கைநழுவி விடுமோ என்னும் ஆபத்தான சூழல் தோன்றியிருக்கின்றது. இப்படியான சூழலில், மாகாண சபையை தவிர்த்து சிந்திக்க முடியுமா? அதனையும் விட்டால் வேறு என்ன வழியுண்டு? இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தொடர்பில் அவரது மருமகன் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் இவ்வாறு கூறுவார். செல்வநாயகம் கேக்கிற்காக பானை நிராகரிக்கும் ஒரு தலைவரல்ல. தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து வாழக்கூடிய ஒரு அரசியல் ஏற்பாடு தான் எமக்கு தேவையானது. அதில் எந்தவொரு மாற்று அபிப்பிராயமும் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருப்பவர்களுக்கு இருக்க முடியாது. ஆனால் அதனை எவ்வாறு அடைவது? வெறும் அறிக்கைகளாலும் வட்ஸ்அப் குறுந் தகவல்களாலும் முகநூல் பதிவுகளாலும் அடைய முடியுமா? கேக் கிடைக்கும் வரையில் பானை உண்டு காத்திருக்கும் அரசியல் சிறந்ததா பட்டினி கிடந்து செத்துப் போவது தொடர்பில் விவாதங்கள் செய்வது நல்லதா?

# பௌத்த மயமாக்கலை தடுத்தல்

(5ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ்தானே இருந்தது. அவர்களின் சட்ட வாதங்களுக்கு மத்தியில்தானே. அனைத்து குடியேற்றங்களும் இடம்பெற்றிருக்கின்றன. தொல்பொருள் மேம்பாடு என்னும் பெயரில் பௌத்த மயமாக்கல் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இதிலிருந்து 'கறுப்பு கோட்' அரசியலால் இதனைத் தடுத்து நிறுத்தமுடியாதென்பது வெள்ளிடைமலை. எனவே, இது தொடர்பில் புதியஅணுகுமுறைகள் தொடர்பில் தமிழ்த் தேசியம் பேசுவோர் சிந்திக்கவேண்டும். தங்களுக்குள் காணப்படும் கட்சி வாதங்கள், தன்முனைப்புவாதங்கள், தேர்தல் நலன்கள் அனைத்தையும் தூக்கிவீசிவிட்டு செயல்படுவதற்கு முன்வர வேண்டும். சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

# குருந்தூர்மலையில் பௌத்த நிர்மாணங்களை

(6ம் பக்கத் தொடர்ச்சி) கடந்த ஜுன் மாதம் 16ஆம் திகதி அங்கு கட்டடம் ஒன்று நிறுவுவதற்கான அடிக்கல் ஒன்றும் நாட்டப்பட்டதோடு. மீண்டும் அப்பகுதிக்கு மக்கள் பிரதிநிதிகள் உட்பட எவருக்கும் அனுமதி முற்றாக மறுக்கப் பட்டது. இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிட மான குருந்தூர் மலையினை பௌத்த மயப்படுத்த தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்படுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனால் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது

இதனையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் கடந்த பத்தாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், குருந்தூர் மலையில் தொடர்ந்தும் பௌத்த சின்னங்களை நிறுவும் வகையிலான நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுள் கைதிகள் விடுதலையை ஆராய...

21ம் பக்கத் தொடர்ச்சி) இல்லாவிட்டால் அவரது வயது உடல்நிலை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு தளர்வுகளை கொடுத்தால் வரவேற்க வேண்டிய விஷயம் என்கிறார்.

மேலும் இஸ்லாமிய சிறைக் கைதிகள் மீது கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் சொல்லப்படுகிறது. அவர்கள் விவகாரத்தில் அரசு கருணை உள்ளத்தோடு நடந்து கொள்ள வேண்டும். அவர்களை விடுதலை செய்த பிறகும் கூட அரசு கண்காணிக்கலாம். இறுதிக் காலத்தில் குடும்பத்தினருடன் அவர்கள் தங்களது வாழ்நாள்களை கழிப்பதற்கு அரசின் இந்த நடவடிக்கை பலன் கொடுக்கும். இவர்களில் பலர் குடும்பத்துடன் தொடர்பில்லாமலும் உள்ளனர் என்பதுதான் வேதனையானது என்கிறார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஆதிநாதன் தலைமையிலான குழுவின் பணிகள் குறித்து அரசு வழக்கறிஞரும் சிறைத்துறை வழக்குகளைக் கையாண்டு வரும் வழக்கறிஞர் கண்ணதாசனிடம் பிபிசி தமிழ் சார்பில் பேசினோம். இப்படியொரு குழுவை எந்த அரசும் அமைத்ததில்லை. மாவட்டங்களில் உள்ள அறிவுரைக் குழுவை வலுப்படுத்துவதை முக்கியமான ஒன்றாகப் பார்க்கிறேன். சிறைவாசிகளின் உடல்நிலை, வயது ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். உயிர் துறக்கக் கூடிய நிலையில் உள்ள அபாய நோய்கள், தொடர் சிகிச்சையில் உள்ளவர்கள் எல்லாம் 20 ஆண்டுகளைக் கழித்துவிட்டால் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற விதி உள்ளது.

மாவட்டத்தில் உள்ள அறிவுரைக் குழுவுக்கு கலெக்டர், தலைவராக இருக்கிறார். அந்தக்குழு ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்யும். கடந்த காலங்களில் அந்தப் பரிந்துரைகளின் பேரில் எந்த முடிவுகளும் எடுக்கப் படவில்லை. அறிவுரைக் குழுவும் ஆண்டு தோறும் கூடுவதில்லை. இதனால் கைதிகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். அறிவு ரைக் குழுவுக்கு அரசால் நியமிக்கப் பட்ட குழு பரிந்துரைகளை வழங்கினால் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறோம். வீரப்பன் அண்ணன் மாதையன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கிறார். இந்தக் குழுவின் பரிந்துரைகள் சிறைத்துறை வரலாற்றில் மிக முக்கியமானதாக இருக்கும் என்கிறார். நன்றி — பிபிசி

# 33வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

**கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞான குமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் 28 டிசம்பர் 2021 செவ்வாய்க்கிழமை தனது 33வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 33 காணும் செல்வன் முகுந்தன் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!**

# பிரிட்டன் மகாராணியாரைக் கொல்ல முயற்சியா?

(19ம் பக்கத் தொடர்ச்சி) இந்த சம்பவம் அரச குடும்பத்திற்கு தெரியும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சவுத்தாம்ப்டனைச் சேர்ந்த அந்த 19 வயது இளைஞர் பின்னர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது, நாங்கள் பெருநகர காவல்துறையின் சக ஊழியர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம் என்று கண்காணிப்பாளர் ரெபேக்கா மியர்ஸ் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் உள்விவகாரக்

(15ம் பக்கத் தொடர்ச்சி) மேல் எழுகின்றன. எனவே உள்ளூர் தலைமைத்துவத்தை கட்டி எழுப்புவது என்பது ஒரு கட்சியின் அத்திவாரத்தை பலப்படுத்துவது தான். தமிழ் கட்சிகள் உள்ளூர் தலைவர்களை எந்த அடிப்படையில் கட்டி எழுப்புகின்றன? அல்லது தெரிந்தெடுக்கின்றன என்று பார்த்தால் ஏற்கனவே தலைவர்களாக இருப்பவர்களைத்தான் பெரும்பாலான கட்சிகள் தெரிந்தெடுக்கின்றன. ஏற்கனவே தலைவர்களாக இருப்பவர்கள் அந்தந்த ஊரின் உள்ளூர் உணர்வுகளையும் உள்ளூர் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் பிரதிபலிக்கிறார்கள்.

அவர்கள் பின்னர் தெளிவூட்டப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்டு செதுக்கி எடுக்கப்படுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான உள்ளூராட்சி சபை நிலைமைகள் நமக்கு உணர்த்துகின்றன. ஒருபுறம் தேசமாகத் திரள்வதற்கு தடையாக உள்ள அக முரண்பாடுகள், ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள். இன்னொருபுறம் கட்சிகளுக்கிடையேயும் ஒரே கூட்டுக்குள்ளேயும் பிச்சல் பிடுங்கல்கள். தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்கள் ஒரு திரட்சியாக இல்லை என்பதைத்தான் அண்மைய வாரங்களில் உள்ளூராட்சி மன்ற நிலவரங்கள் நமக்கு உணர்த்துகின்றனவா?

அமெரிக்காவையும் இந்தியாவையும் கையாள்வதற்கு வெளியுறவுக் கொள்கை வேண்டும் என்று பேசப்படும் ஒரு காலகட்டம் இது. ஆனால் உள்ளூரில் தமது சொந்த மக்களைத் திரட்டுவதற்கே கட்சிகளிடம் பலமான உள்விவகாரக் கொள்கைகள் இல்லை என்பதைத் தான் உள்ளூராட்சி சபைகள் உணர்த்துகின்றனவா?

# மீண்டும் இந்திய "றோ"?

(8ம் பக்கத் தொடர்ச்சி) இந்திய புலனாய்வு சேவை தனது கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளது. இந்த நிலையில், வடக்கில் மூன்று தீவுகளில் நிர்மாணிக்கப்படவிருந்த மூன்று கலப்பு மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் திட்டத்தை சீனா, மாலைதீவுக்கு மாற்ற தீர்மானித்தது.

காற்று, சூரிய சக்தி ஆகியவற்றை கொண்ட கலப்பு மின் உற்பத்தி நிலையங்களை சீனா நிர்மாணிக்கவிருந்த தீவுகள் இந்தியாவின் தென் பகுதிக்கு மிக அருகில் இருப்பதால் இந்திய அரசு இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. இலங்கையில் இந்திய றோ புலனாய்வுப் பிரிவினர் நீண்டகாலமாக செயற்பட்டு வந்த போதிலும் அவர்கள் இலங்கையில் செயற்படுகின்றனர் என்ற உத்தியோபூ ர்வ தகவல் ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாத தாக்குதலுடன் தெரியவந்தது எனவும் அந்த சிங்கள பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# ஆயுள் கைதிகள் விடுதலையை ஆராய தமிழக அரசு அமைத்த குழுவால் 34 ஆண்டுகளைக் கடந்தவர்களுக்கு பலன் உண்டா?

– ஆ.விஜயானந்த் –

**ஆயுள் சிறைக் கைதிகளின் முன் விடுதலை தொடர்பாக தமிழ்நாடு அரசு அமைத்துள்ள குழுவை மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர். "கைதிகளின் மனநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அறிவதற்கு பல மாநிலங்களில் பல்வேறு அளவுகோல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் அப்படி எந்த அளவுகோள்களும் இல்லை," என்கின்றனர் வழக்கறிஞர்கள். தமிழ்நாடு அரசின் இந்த குழுவால் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்படுமா? இந்த குழுவால் என்ன நடக்கும்?**

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் அண்ணாவின் 113ஆவது பிறந்த நாளையொட்டி நல்லெண்ண அடிப்படையில் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவிக்கும் 700 கைதிகளை அரசு விடுதலை செய்ய உள்ளதாக கடந்த செப்டம்பர் மாதம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து முன் விடுதலையை பெறுவதற்குத் தகுதியானவர்கள் தொடர்பான அரசாணையும் வெளியானது. அதில் வகுப்பு மோதல் சாதி மோதல் பாலியல் வன்கொடுமை, அரசுக்கு எதிரான செயல்பாடுகள், குண்டு வெடிப்பு, ஊழல் உள்பட 17 வகையான குற்றங்களில் தொடர்புடையவர்களை விடுதலை செய்வதற்கு வாய்ப்பில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை ஆய்வு செய்வதற்கு குழு ஒன்றையும் தமிழ்நாடு அரசு அமைத்தது. அரசாணையில் குறிப்பிட்டுள்ள தகவலின்படி பார்த்தால் இஸ்லாமிய சிறைக் கைதிகள் 30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் வீரப்பன் அண்ணன் மாதைய்யன், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள ஏழு பேர் ஆகியோரது முன்விடுதலை சாத்தியமில்லாமல் போய்விட்டதையும் மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டினர். தவிர பழைய அரசாணையையே புதிய அரசும் புதுப்பித்துள்ளதாகவும் இதற்கென தனியாக குழு அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில் ஆயுள் சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக ஓய்வுபெற்ற நீதியரசர் ஆதிநாதன் தலைமையில் குழு ஒன்றை அமைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்தக் குழுவில் மனநல மருத்துவர், மருத்துவக் கல்வி இயக்குநர், சிறைத்துறையின் தலைமை நன்னடத்தை அலுவலர், குற்றவியல் சட்டத்தில் நிபுணத்துவம் உள்ள மூத்த வழக்கறிஞர், சிறை மற்றும் சீர்திருத்தத் துறையில் துணைத் தலைவர் பதவி உள்ள ஒருவர் என ஆறு பேர் இடம் பெற உள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.





இந்தக் குழுவினர் தமிழ்நாடு சிறைகளில் பத்து மற்றும் 20 ஆண்டுகளில் தண்டனை முடிந்தும் விடுதலை ஆகாமல் உள்ளவர்களில் வயது முதிர்ந்தவர்கள், பல்வேறு இணை நோய்கள் உள்ளவர்கள், உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரது நிலைமையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளின்படி முன் விடுதலைக்கு பரிந்துரை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக மனிதநேய மக்கள் கட்சியில் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட அரசாணைகள் மூலம் பயன் பெற முடியாத வாழ்நாள் சிறைவாசிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு வழி வகுக்கும் வகையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. கடந்த கால பாரபட்சங்களால் கண்ணீர் நிரம்பிய சிறைவாசிகள் குடும்பத்தினரின் இல்லங்களுக்கு ஆதிநாதன் குழு விரைவில் வழி வகுக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் சிறை என்பது தவறிழைத்த மனிதனை நல்வழிப்படுத்தி சமூகத்தில் தகுதியானவனாக மாற்றுவதற்கே என்பது நாகரிக சமூகம் ஏற்றுக் கொண்ட கருத்தியல் ஆகும். அதிலும் குற்றமற்றவர்கள் கூட சில நேரங்களில் நீதிப் பிழையால் சிறைத் தண்டனை அடைந்துவிடும் நேர்வுகளை இந்த உலகம் கண்டிருக்கிறது என்பதால் சிறைகள் ஒருபோதும் பழி வாங்கும் இடமாக இருக்கக் கூடாது என்பதே நியதி என்கிறார்.

மேலும் ஒரு மனிதனை எட்டு ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைத்திருப்பதே அதிகப்படியானது என மறைந்த நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் சொல்வார். ஒரு நாடு நாகரிமடைந்து விட்டது என்பதை சிறைவாசிகளை அந்த அரசு எவ்வாறு கையாள்கிறது என்பதில் தான் அடங்கிருக்கிறது என்பார்கள்.

தண்டனை குறைப்பு என்பது அரசின் அதிகாரத்துக்குட்பட்டதே என பல்வேறு தீர்ப்புகளில் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆயுள் சிறைவாசிகள் முன்விடுதலை தொடர்பில் முதலமைச்சரின் அறிவிப்பு தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல்" என டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் உள்ளவர்களை இரு வகையாக பார்க்கலாம். குற்றம் செய்துவிட்டு சிறையில் உள்ளவர்கள், குற்றத்தில் தொடர்பில்லாத சில நிரபராதிகள் என பிரித்துப் பார்க்கலாம். சிறை என்பதே சீர்திருத்தத்திற்கான இடம். ஒரு மனிதன் தன்னுடைய இயல்பு நிலையில் இருந்து தவறி ஒரு செயலைச் செய்யும் போது அதற்காக அவரை அடைத்துவைக்கும் இடமாக சிறை உள்ளது. ஆயுள் தண்டனைக் கைதிகள் விவகாரத்தில் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் அந்தக் கைதி எந்தளவுக்கு மாறியிருக்கிறார் என்பதைப் பார்ப்பதற்கு அளவுகோல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் அதுபோன்ற அளவுகோள்களே இல்லை. இத்தனைக்கும் சமூக நீதி பேசக் கூடிய மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்கிறார் மனித உரிமை செயற்பாட்டாளரும் வழக்கறிஞருமான சிவக்குமார்.

தொடர்ந்து பிபிசி தமிழிடம் பேசியவர், இங்குள்ள சிறைவாசிகளும் நீதிமன்றத்துக்குச் சென்று வெவ்வெறு தீர்ப்புகளை சுட்டிக்காட்டி தனக்கு நீதி கேட்பதுதான் நடக்கிறது. மேலும் சிறைத்துறைக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. சிறைத்துறை என்பது முழுக்கவே சீர்திருத்தம்தான். சிறைத்துறையும் காவல்துறையும் இரண்டறக் கலந்ததால் இதற்கான வித்தியாசங்களே இல்லாமல் போய்விட்டது என்கிறார்.

சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கான சூழலுக்கு ஒரு கைதி வந்துவிட்டாரா என்பதை உளவியல் நிபுணர், சிறை நன்னடத்தை அலுவலர் சிறைத்துறை அதிகாரிகள் ஆகியோர் பார்க்கலாம். ஹசிறைக் கைதிகளின் நன்னடத்தையை அளவிடுவதற்கு ஒரு குழுவை அமைத்து அதற்கேற்ப விடுதலை செய்யலாம்" என நீண்ட காலமாக பேசி வருகிறோம். தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பை மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கிறோம்.

சிறைக் கைதிகள் சிறையில் என்ன செய்தார்கள், அவர்களின் உடல்நிலை எப்படி உள்ளது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைக்கான அறிவிப்பாகவும் இதனைப் பார்க்கிறோம். மனிதனை மேம்படுத்தும் இடமாக சிறை உள்ளது என காந்தி சொல்வார். பள்ளிக்கு ஒரு மாணவர் செல்கிறார் என்றால் அவர் நல்லபடியாக படிக்க வேண்டும் என்பது அடிப்படை. அதே போல் ஒருவர் சிறைக்குச் செல்கிறார் என்றால் அவர் திருந்தி நல்லபடியாக வரவேண்டும் என்பதே மக்களின் மனநிலையாக இருக்க வேண்டும். அரசின் முடிவை வரவேற்கிறோம். இந்தக் குழுவில் மிகச் சிறந்த நிபுணர்களை முதலமைச்சர் நியமிப்பார் எனவும் நம்புகிறோம் என்கிறார் வழக்கறிஞர் சிவக்குமார்.

தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஆதிநாதன் குழு குறித்து பிபிசி தமிழிடம் பேசிய மூத்த பத்திரிகையாளர் சிவசுப்ரமணியம் கைதிகள் முன்விடுதலை விவகாரத்தில் அரசு நேரடியாக முடிவெடுக்க முடியாத சூழல் வரும்போது, ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எடுப்பது என்பது வரவேற்கத்தகுந்த முடிவு. ஆனால் அந்தக் குழுவின் நோக்கம் நீண்டகால சிறைவாசிகளை விடுதலை செய்யும் வகையில் இருக்க வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக இல்லாத குழுவாக அது இருந்தால் நல்லது என்கிறார்.


தொடர்ந்து பேசுகையில் அரசாணையில் 17 வகையான குற்றங்களைக் குறிப்பிட்டுள்ளதால் அது தொடர்புடைய வழக்குகளில் கைதானவர்களை முன்விடுதலை செய்வதில் சிக்கல்கள் உள்ளன. இதனைக் களையும் வகையில் அரசு அமைத்துள்ள குழுவானது, வழக்கோடு தொடர்புடைய ஆவணங்களையும் பார்க்க வேண்டும். வீரப்பன் தொடர்பான வழக்கில் அவரது அண்ணன் மாதைய்யன் உள்பட 3 பேர் சிறையில் நீண்டகாலம் உள்ளனர். இதில் சம்பவம் நடந்த இடத்தில் மாதைய்யன் இல்லை. ஆனால் அவர் இருந்ததாக போலீஸார் சான்றுகளை சமர்ப்பித்தனர். இதனை விசாரிக்கும் போது அவருக்குத் தொடர்பில்லை என்றால் விடுவிக்கலாம். அவ்வாறு

(20ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே1 கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். மனதில் இருந்த கவலை நீங்கி நிம்மதி கிடைக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு எளிதில் முடிய வேண்டிய காரியம் கூட தாமதமாகலாம். மாணவர்கள் ஒரு முறைக்கு இருமுறை பாடங்களை படிப்பது நல்லது. தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது.




ரிஷபராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். மனதிற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பம் பற்றிய கவலை ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியம் அடையும். சகோதரர்களிடம் பேசும் போது கவனம் தேவை. பெண்கள் எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. தேவையற்ற பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. இவ்வாரம் ஐயப்பன் தரிசனம் செய்யவும்.





மிதுனராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகஸ்தர்கள் எடுக்க கூடிய காரியங்களில் அதிக கவனம் தேவை. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகும். பெண்கள் நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவர். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது.




கடகராசி அன்பர்களே! புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையாமல் நிதானமாக யோசித்து செய்வது நல்லது. குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும். உறவினர்களிடம் இருந்த பழைய பகைகள் மாறும். பெண்கள் அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்கள் எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுப்பர்.




சிம்மராசி அன்பர்களே1 ஆக்க பூர்வமான யோசனைகளை செயல்படுத்துவீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள்கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்க பெறுவர். குடும்பத்தில் கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும். உறவினர்கள் வருகை இருக்கும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய தூண்டும். பெண்கள் எதிலும் சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி பெறுவர். மாணவர்களில் உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது. வெள்ளி, ஞாயிறு தினங்களில் துர்க்கை அம்மன் வழிபாடு செய்தல் நன்று.




கன்னிராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர் களால் லாபம் கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம்.கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். பெண்கள் திறமையான பேச்சின் மூலம் ஆதாயம் அடைவர். எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும்.








துலாம் ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.குடும்பத்தினருக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி கொள்வது புத்திசாலித்தனம். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். புத்திக் கூர்மையுடன் செய்வது நன்மை பயக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! வாக்கு வன்மை அதிகரிக்கும். எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர்.முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். மன அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். குடும்ப செலவுகள் குறையும். கலைத்துறையினருக்கு நிலுவையில் உள்ள காரியங்கள் சிறப்பாக முடிய வழி பிறக்கும். பெண்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான கவலைகள் நீங்கும்.




தனுசுராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த தடை தாமதம் நீங்கும். எதிலும் இருந்து வந்த மந்தமான சூழ்நிலை மாறும். வரமல் நின்ற பணம் வந்து சேரும். பயணங்கள் சாதகமான பலனை தரும். தொழில், வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். புதிய நபர்களின் அறிமுகம் நன்மை தரலாம். உத்யோகத்தில் இருப்பவர்களின் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். உறவினர்களிடம் பழகுவதில் கவனம் தேவை. கவனமுடன் செயல்பட்டால் மேலிடத்தின் நன்மதிப்பை பெறலாம். பெண்கள் முழுக் கவனத்துடன் செய்யும் காரியம் வெற்றியாகும். மாணவர்கள் ஆசிரியர்களின் ஆதரவுடன் கல்வியில் முன்னேற்றம் காண்பர். மனகுழப்பம் நீங்கும்.




மகரராசி அன்பர்களே! எல்லாவகையிலும் நற்பலன்கள் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். எதிர்பாராமல் நடக்கும் திருப்பங்களால் சாதகமான பலன் கிடைக்கும். பொழுதுபோக்கில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களுக்காக அலைய வேண்டி இருக்கும். பண வரத்து எதிர்பார்த்தபடி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற வாய்ப்புகள் வரும். புதிய வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்களால் இழுபறியாக இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பண்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காணப்படும். உங்களது செயல்கள் மூலம் புகழ் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்து நன்மதிப்பு பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். திடீர் பயணங்கள் செல்ல நேரிடும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். புதிய வீடு வாகனம் வாங்கக் கூடிய யோகம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பர். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். மனவருத்தத்துடன் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேர்வர். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். எல்லாவகையிலும் நன்மை உண்டாகும்.




மீனராசி அன்பர்களே! விருப்பங்கள் கைகூடும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்கள் மூலம் நன்மை உண்டாகும். மனகுழப்பம் நீங்கி தெளிவு பெறுவீர்கள். எதிர்பாலினரால் காரிய அனுகூலம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். புதியவேலை தேடுபவர்களுக்கு நல்ல தகவல் வரும். குடும்பத்தில் அமைதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சகஜநிலை இருக்கும். உறவினர்கள் வருகை உண்டு. . பொறுமையாக கையாள்வதன் மூலம் பெரிய பிரச்னைகளை தவிர்க்கலாம். பெண்களுக்கு செயல்கள் மூலம் மதிப்பு கூடும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களை படிப்பது நன்மை தரும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE
Serving the Tamil Community
OF GREATER TORONTO
உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.
At Need Funeral Arrangements
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation
Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826
மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை
Christeen Seevaratnam
416-258-6759
இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?
Pre-Arranging: A Wise Choice...
FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death
EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden
8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


SOLD
SOLD
BRAMPTON
$952,000
$1,270,000
MARKHAM
$53,000 OVER ASKING
Steeles/Windmill
16th Ave/Cornell Rouge
Top 5% Sales Rep In Canada
Jey. Paramanantham
Sales Representative
647.295.7784
Jey.Homelife@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr,Unit 205,Markham-On, L3S 4N8.
Off: 905.201.9977 Fax: 905.201.9929
*Independently Owned and Operated
HOMELIFE
HIGHER STANDARDS
www.jeydreamhomes.com


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7